Regd. No. 2514 Swadesamitran Illustrated Weekly



BURN'S STONE WARE PIPES

பர்ன்

பீங்கான் குழாய்கள்

பர்ன் கம்பெனியாரின் பீங்கான் குழாய்கள் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷனுக்கு சரியாக பி. எஸ். எஸ்-க்கு தயாரிக்கப்படுகின்றது. இக் குழாய்கள் பூமியிலுள்ள திராவகம் கலந்த காற்றுக்களால் தாக்கப்படாதது. அழிவற்றது.

சென்ற 80 வருஷங்களுக்கு மேலாக, இந்தியா, பர்மாவிலுள்ள முனிஸிபல் கார்ப்பொரேஷன்கள், சுகாதார இலாகாக்கள் மற்றுமுள்ள பொதுஸ்தாபனங்கள் பர்ன் பீங்கான் குழாய்களை உபயோகித்துத் திருப்தியடைந்துள்ளனர்.

SAVE FOR VICTORY
BRITISH · WAR · SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட், ஸ்தாபிதம்: 1781.

12, மிஷன்ரோ, கல்கத்தா. தொழிற்சாலை:- ராணிகஞ்சு & ஜபல்பூர்.

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

BURN & CO., LTD.

ESTABLISHED 1781

12, MISSION ROW, CALCUTTA.

WORKS AT RANIGANJ AND JUBBULPORE

நரஸுஸ் டீ, காபி

மிக உயர்ந்தவை

ஏனெனில் குணத்திலும், தரத்திலும், நறுமணத்திலும் அவை நிகரற்றவை.

எந்தத் தரத்திலும் எவ்வளவு வேண்டுமானாலும் இந்தியாவில் எந்த பாகத்திற்கும் அனுப்பப்படும்.

மற்ற விவரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:—

நரஸுஸ் மான்யுபாக்சரிங் கம்பெனி
ஹெட் ஆபீஸ்:
சேலம்.

MNK-14-TH

தமிழ் நூல்கள்

குழந்தைக்கட்டி	1 4
உலகரகசியம்	1 0
ஜெய காந்தன்	0 [illegible]
வசலாம்பிகை	2 4
தீன தயாளு	0 10
ஜகஜ்ஜாலன	1 [illegible]

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாதபாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவறாமல் வரும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42 Churchgate St., Fort, Bombay
Phone 21343.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

1 மணியில் வாலிபம்!

ரமணவிலாசினி வடிகா

காமசக்தியை விருத்தி செய்து, துரிதஸ்கலிதத்தை நிறுத்தி, எல்லோருக்கும் சிற்றின்பத்தில் திருப்தியைத் தரும் பரம ஔஷதம். டப்பி ரூ. 1.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனாபஜார் ரோட், மதராஸ்.

கே. சுவாமிநாதன் & கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

Printed and Published by T. S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras.- Editor, C. R. Srinivasan, B

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 20 14-6-42 Price 2 Annas

மூன்று தலை முறைகள்.

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON. ENGLAND

வாரப் பதிப்பு சுதேசமித்திரன் 14-6-1942

சென்றவார நிகழ்ச்சிகள்

நேஷனல் ஹெரால்டுக்குப் புதிய உத்தரவு

'நேஷனல் ஹெரால்டு' பத்திரிகை ஆசிரியர் இம்மாதம் 2-ந் தேதி புதிதாகப் பதிவு செய்து கொள்ள ஜில்லா மாஜிஸ்டிரேட் முன் ஆஜரான போது அப்பத்திரிகை ஆசிரியர் 6000 ரூபாயும் அச்சுக்கூட சொந்தக்காரர் 6000 ரூபாயும் தனித்தனி ஜாமீன் கட்ட வேண்டுமென மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார். இதை யொட்டி பண்டித ஜவஹர் பொதுஜன சகாயத்தைக் கோரி ஒரு விக்ஞாபனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். நகரில் "ஹிந்து" "இந்தியன் எக்ஸ்பிரஸ்," "ஆனந்த விகடன்" முறையே 250-ரூபாய்களும், "சுதேச மித்திரன்", "கலகி" முறையே 100-ரூபாய்களும் இதற்கு உதவியிருக்கின்றன. மஹாத்மாஜியும் இந்த உத்திரவை பலமாகக் கண்டித்திருக்கிறார்.

* * * *

அலாஸ்கா மீது பாய்ச்சல்

வடபஸிபிக் பிரதேச சம்பந்தமாக கடற்படை இலாகா இம்மாதம் 3-ந் தேதி பின்கண்ட அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

'அலாஸ்காவிலுள்ள டச்சுத் துறைமுகத்தை 4 ஜப்பானிய வெடிகுண்டெறியும் விமானங்களும் 15 யுத்த விமானங்களும் இன்று காலை 6 மணிக்குத் தாக்கின. சுமார் 15 நிமிஷ நேரம் இத்துறைமுகம் தாக்கப்பட்டது. இரவில் கடற்படை இலாகா பின்கண்ட 2வது அறிக்கையை வெளியிட்டது:— சிறிது ஆள் சேதமேற்பட்டது. சில சாமான் கிடங்குகளில் தீ விபத்தேற்பட்டது. ஆனால் பெருஞ்சேதமெதுவும் ஏற்படவில்லை. வேறு பிரதேசங்களில் விசேஷமெதுவுமில்லை.

டோக்கியோவைத் தாக்கிய அமெரிக்க விமானங்கள் அலாஸ்காவிலிருந்து கிளம்பியிருக்கலாமென்றும், அவை டோக்கியோவைத் தாக்கிய பிறகு சீனாவில் இறங்கியிருக்கலாமென்றும், இதற்குப்பதில் செய்வதற்காகவே டச்சுத் துறைமுகத்தை ஜப்பானியர் தாக்கியிருப்பதாகச் சிலர் காரணம் கூறுகின்றனர். டோக்கியோவைத் தாக்கியதற்குப் பதிலாகவேஜப்பானியர் டச்சுத் துறைமுகத்தைத் தாக்கி யிருப்பரென்று கடற்படை இலாகா உத்யோகஸ்தர்கள் கூறினர்.

* * * *

மிட்வே தீவு தாக்கப்பட்டது

மத்திய பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள மிட்வே தீவை ஜப்பானிய விமானங்கள் இம்மாதம் 3-ந் தேதி காலை 9-மணிக்குத் தாக்கியதாகத் தகவல் வந்திருக்கிறது. மிட்வேத் தீவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் யுத்த விமானங்கள் ஜப்பானிய கடல் விமானங்களை மிட்வேயுக்கு மேற்கே வழிமறித்தனர். மிட்வேத்தீவு டச்சுத் துறைமுகத்திலிருந்து 1653-மைல் தூரத்திலிருக்கிறது. மிட்வேத் தீவு பெர்ல் துறைமுகத்திலிருந்து 1149-மைல் தூரத்திலிருக்கிறது.

* * * *

மிட்வே படையெடுப்பு முயற்சி வீண்

மிட்வே தீவு மீது படையெடுக்க ஜப்பானியர் செய்த முயற்சி பலிக்கவில்லை.

ஜப்பானிய யுத்தக் கப்பல்களிலும், துருப்புக் கப்பல்களிலும் மூழ்கடிக்கப்பட்டவை, சேதமுற்றவை இவற்றின் எண்ணிக்கை 13-க்குக் குறைவில்லை; 15-ஆக இருந்தாலும் இருக்கலாம்.

இரண்டு அல்லது மூன்று ஜப்பானிய விமானம் தூக்கிக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒன்று அல்லது இரு விமானந் தூக்கிக் கப்பல்களும் 3 யுத்தக் கப்பல்களும், 4 க்ரூஸர்களும், 3 துருப்புக் கப்பல்களும் சேதமுற்றன.

3-எதிரி விமானம் தூக்கிக் கப்பல்களிலிருந்த விமானங்கள் அனைத்தும் நாசமாகிவிட்டன. வேறு இரு எதிரி விமானம் தூக்கிக் கப்பல்களைச் சேர்ந்த விமானங்களும் அதே கதிக்குள்ளாகியிருக்கலாம்.

* * * *

'வஞ்சம் தீர்த்துக் கொண்டோம்'

மிட்வே போரைப்பற்றி அமெரிக்கக் கடற்படைத் தலைவர் அட்மிரல் நிமிட்ஸ் பின்கண்டபடி அறிவிக்கிறார்:—

பெர்ல் ஹார்பர் தாக்குதலுக்காக நாம் இப்போது எதிரிகள் மீது ஓரளவு வஞ்சம் தீர்த்துக் கொண்டுவிட்டோம்.

மிட்வே பகுதியிலுள்ள அமெரிக்கப் படையினரின் திறமை, கடமையில் அவர்களுக்குள்ள சிரத்தை இவை காரணமாக நமக்கு மிக முக்கியமானதொரு வெற்றி ஏற்படவிருக்கிறது. ஆறு மாதங்களுக்குமுன் ஒரு ஞாயிறன்று யுத்தப்பிரகடனம் வெளிவரு முன்பே ஜப்பானியர் ஒஹாவிலுள்ள நமது படைகளைத் திடீரென்று தாக்கினர். இதன் பலனாக நமக்குப் பெருஞ் சேதமேற்பட்டது உண்மையே. ஆனால் அவர்களது நடவடிக்கை கண்டு இந்த துரோகத்திற்குச் சரியாகப் பழிவாங்குவதென்று நமது மக்கள் உறுதி கொண்டார்கள். இப்போது நாம் ஓரளவு வஞ்சம் தீர்த்துக் கொண்டுவிட்டோம். ஜப்பானியக் கடற்படை பலத்தை அடியோடு ஒழிக்கும்வரை நாம் முற்றிலும் பழி வாங்கியதாகாது. அத்துறையில் நாம் விசேஷ அபிவிருத்தியடைந்திருக்கிறோம் நமது லட்சியத்தை நோக்கி பாதி தூரம் சென்றுவிட்டோமென்றே சொல்லலாம்.

* * * *

ஜப்பானுக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

சென்ற 5-ந் தேதி நடந்த பத்திரிகா நிருபர்களது கூட்டத்தில் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் பின்வருமாறு தெரிவித்தார்:—

சீனாவில் பலவிடங்களில் ஜப்பானிய ராணுவம் விஷ வாயுக்களையோ அல்லது சகிக்க முடியாத வாயுக்களையோ உபயோகித்து வருவதாக யு. எஸ். ஸர்க்காருக்கு அதிகாரிகளிடமிருந்து ரிப்போர்ட்டுகள் வந்துகொண்டிருக்கின்றன. சீனா மீதோ அன்றி வேறு எந்த நேசதேசத்தின் மீதோ ஜப்பான் இத்தகைய ஜீவகாருண்யமற்ற போர் முறையை உபயோகிப்பதில் பிடிவாதம் காட்டினால், யுனைடெட் ஸ்டேட்ஸ் அதனைத் தன் மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கையாகக் கருதி இம்மாதிரியான முறையை பதிலுக்குப் பதில் செய்வதற்காகப் பூரணமாகக் கையாளுமென்று தெளிவாக்க நான் விரும்புகிறேன். ஜப்பானைப் பூரணமாகப் பழி வாங்க நாங்கள் தயாராக இருப்போம். இதற்கான பொறுப்பு ஜப்பானையே சாரும்.

மிஸ்டர் ரூஸ்வெல்ட் ஜப்பானைக் கண்டிப்பாக எச்சரித்திருப்பது மே 10-ந் தேதி மிஸ்டர் சர்ச்சில் ஹிட்லரை எச்சரித்ததை ஞாபகப்படுத்தக் கூடியதாக இருக்கிறது. பிரதம மந்திரி சர்ச்சில் ரஷ்யாவில் நாஜிகள் விஷவாயுவை உபயோகித்தால் பிரிட்டன் தனது விமானங்களைக் கொண்டு ஜெர்மனி எங்கும் விஷவாயு வெடிகளை வீசும் என்று எச்சரித்திருக்கிறார் மிஸ்டர் ரூஸ்வெல்ட் நாஜிகள் ஐரோப்பாவில் விஷவாயுவைப் பிரயோகிப்பது பற்றிக் கிடைத்த தகவல்கள் அதிகாரிகளிடமிருந்து வரவில்லை என்று கூறுகிறார்.

* * * *

லெனின்கிராட் முனையில் கடும் போர்

லெனின் கிராட் முனையில் ஒரு பகுதியில் கடும்போர் நடந்து வருகிறது.

ஜெர்மனியர் திருப்பித் தாக்க மிகத் தீவிரமாக முயன்றனராயினும் பிறகு அவர்கள் பின் வாங்க நேர்ந்தது.

* * * *

கொரில்லா சண்டை

சென்ற நவம்பர், டிசம்பரில் நடந்தது போன்ற உக்ரமான விமானப் போராட்டம் தற்போது ஸெபாஸ்டபூல் மீது நடைபெறுகிறது. கருங்கடலிலுள்ள ரஷ்ய கடற்படையைத் தாக்கச் செய்யும் முயற்சியில் இது ஒரு பகுதியாகும். சென்ற சில தினங்களாக நடைபெறும் பெருவாரியான தாக்குதல்களில் 38 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றன. இந்த மாத ஆரம்பம் வரை ஜெர்மனி தனி விமானங்களையே அனுப்பி வந்திருக்கின்றனர். அவர்கள் 20 வெடி குண்டெறியும் விமானங்களை இழந்து விட்டார்கள். பிறகு அவர்கள் பெருவாரியான தாக்குதலை ஆரம்பித்தனர். இம்மாதம் முதல் தேதி ரஷ்யர் 27 நாஜி விமானங்களைச் சுட்டு வீழ்த்தினர். எதிரி விமானக்கூடமொன்றைத் தாக்கியபோது ரஷ்யர்கள் தரையிலிருந்த மற்றும் 11 விமானங்களை அழித்தனர். ரஷ்யர்கள் பிரியன்ஸ்கிற்கு அருகிலுள்ள நாஜி விமானக் கூடமொன்றைத் திடீரெனத் தாக்கி அங்கிருந்த 20 நாஜி விமானங்களை அழித்தனர். மற்றும் 11 விமானங்கள் சேதப்படுத்தப்பட்டன.

ஸ்மோலன்ஸ்கைச் சுற்றி இது வரை 15000 எதிரிகளை ரஷ்ய கொரில்லாக்கள் (விரோதிகளைப் பதுங்கி நின்று கண்ட விடங்களில் அடிக்கும் ஆயுத பாணிகள்) அழித்தனர். 27 எதிரி விமானங்களையும், 34-டாங்கிகளையும் அவர்கள் அழித்தனர்.

ரஷ்யாவில் நடக்கும் போரில் ஜயாபஜயம் நிச்சயமாகவில்லை. அங்குமிங்குமாகப் பல ஸ்தலப் போர்கள் நடக்கின்றன. ரஷ்ய கொரில்லாக்கள் ஜெர்மன் படை வரிசைக்குப் பின் தங்களது வேலைகளைச் செய்து வருகின்றனர் ஓரல் போர் முனையில் ரஷ்ய கொரில்லாக்கள் ஜெர்மன் குதிரைப்படை சென்ற ரயில் தண்டவாளத்தை விட்டுக் கீழே விழும்படி செய்தனர். இதனால் ஜெர்மன் துருப்புகளில் 300 பேர் மடிந்தனர். கொரில்லாக்கள் எப்பொழுது எங்கு எப்படித் தாக்குவரென்பது ஜெர்மனியருக்குத் தெரியவில்லை.

* * * *

சீன யுத்தம்

செகியாங் மாகாணத்தின் தலைநகரான கின்வாவுக்கு 50 மைல் தூரத்திலுள்ள ஸுஷீன் விமானக் கூட்டத்தை ஜப்பானியர் வசப்படுத்திக் கொண்டனர். சீனர்கள் தற்போது ஸுஷீன் கோட்டைக்குள் தங்கள் படைகளை வாபீஸ் பெற்று விட்

(14-ம்பக்கம் பார்க்க).



ராஜாஜி, ஸ்ரீ எஸ். ஸத்தியமூர்த்தி, மஹா கனம் ஸ்ரீநிவாஸசாஸ்திரியார் சம்பாஷிக்கின்றனர்

ராஜாஜியின் ராஜி

எங்கும் ஒரே பேச்சு; நான்குபேர் கூடுமிடமெல்லாம் அதே பேச்சு; அந்த அளவுக்கு ராஜாஜியின் முயற்சி பலித்து விட்டது. பெரு முயற்சி எடுத்துக் கொண்டார்; அரும்பாடு பட்டார். கடும் கோடையில் அபர வயதில் எதிர்ப்புக்கிடையே பிரசாரத்தைத் துவக்கினுர். தமிழ் நாட்டிலும் கேரள நாட்டிலும் கன்னட நாட்டிலும் பல பிரசங்கங்கள் செய்தார். ஆயிரம் கணக்கான மைல் கடந்து லக்ஷக்கணக்கான மக்களுக்கு உபதேசம் செய்தார். கேட்டவர் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்துவிட்டனர். அறிவை யொட்டி ஆராய வேண்டும் என்றே கேட்டுக்கொள்ளுகிருர் ராஜாஜி.

காங்கிரஸ் ஸ்தாபனம் பெரிது; அதை விட தேசம் பெரிது. இதை அறிவுறுத்துவது காங்கிரஸைக் குறைத்துக் கூறும் நோக்கத்துடன் அல்ல. காங்கிரஸுக்கும் தேசத்திற்கும் உள்ள தொடர்பை மக்கள் நன்ருய் அறியவேண்டும்; சரியாய் மதிப்பிட வேண்டும். காங்கிரஸ் தேசத்தின் பாய்கால். பயிரும் பச்சையும் துலங்க உயிரும் ஊட்டமும் அளித்து வருகிறது. பாய்கால் பயன்பட பார் இடியாமல் பார்க்க வேண்டும். மேடு தட்டாமல் காக்க வேண்டும். மராமத்து வேலை முக்கியம்; யார் செய்வது? பாசன அதிகாரிகள் கவனிக்க வேண்டும். கவனிக்காவிட்டால் சும்மாயிருக்க முடியுமா? முடியாது: பயன்படுபவர் குடிகள்: குடிகள் கடமையை ஏற்கவேண்டும். குடிமராமத்தைக் கோரியே கார்யத்தில் இறங்கினுர் ராஜாஜி.

காங்கிரஸ் ஸ்தாபனத்தின் உயிர்நிலை எங்கே இருக்கிறது? அங்கத்தினர்களிடமல்ல; அபிமானிகளிடம். லக்ஷக்கணக்கில் அங்கத்தினர்களிருக்கலாம் மக்களோ கோடிக்கணக்கில் இருக்கிருர்கள்: பின்னவரின் ஆதரவில்லாமல் முன்னவர் எதையும் சாதிக்க முடியாது. இது மெய்; மறுக்க முடியாத உண்மை. காங்கிரஸ் கண்ட அநுபவம் அதுதான். வெற்றி கண்ட காலத்தில் மக்களின் ஆதரவு திரண்டு நின்றது. தோல்வி அநாதரவைத் தொடர்ந்தது. இந்த ஆதரவு என்றைக்கும் நிலைக்கவே அங்கத்தினர்களை பக்குவபபடுத்தினுர் மகாத்மா. சேவைக்கு தியாகத்தை உரை கல்லாக விதித்தது மக்கள் நம்பிக்கை கொள்ளவே. தொண்டர் படை திரண்டு விட்டது. கட்டும் கோப்பும் கொண்ட பெரிய ஸ்தாபனம் உருப்பெற்றது. வேலை ஒழுங்காய் நடக்க காய்தாவும் கண்டிப்பும் பிறந்தன. ஸ்தாபனம் வலுத்தது. ஊடே கட்டும் இருகி விட்டது. உள்ளே சுவாதீனம் குறையக் குறைய வெளியே செல்வாக்கும் செழிப்பும் கரைய ஆரம்பித்து விட்டது. இது மாற வேண்டும்.

மாருத வரையில் முடிவான லக்ஷியம் கைகூடாது. உருவான வேலைத் திட்டம் வகுப்பதும் சிரமம் எந்தக் கேடுக்கும் மகாத்மா கண்ட பரிகாரம் ஒன்று தான். ஒத்துழையாமை அது. அஹிம்ஸையை அஸ்திவாரமாகக் கொண்டது. அதற்குத் திட்டம் போடவும் இன்று மகாத்மா தயங்குகிருர். ஏன்? பின்பலம் இல்லாமல் பலிக்காது. பின் பலம் பின்னப்பட்டுக்கிடக்கிறது. ஹிந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குறைவு வழி மறிக்கிறது. மகாத்மாவே இதை ஒப்புக்கொள்ளுகிருர்: வினைத்தை விலக்க வழியென்ன? ஒற்றுமை வளர்க்க வழிதேட வேண்டும். முதற் காரியம் அது. ஒற்றுமை வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை; உண்மை. ஆனுல் இதுவரையில் செய்த முயற்சியெல்லாம் வீணுகிவிட்டது. அரைகுறை முயற்சி விரஸத்தை வளர்த்து விட்டது.

ஒற்றுமையை வளர்க்க புதுவழி சொல்லுகிருர் ராஜாஜி. அலகபாத்தில் அரங்கேற்றினுர் அதை. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி ஏற்கவில்லை: வேறு வழியும் காட்டவில்லை. கார்யமோ பெரிது: நாட்டிலே நெருக்கடியோ முற்றி வருகிறது. சுவாதீனத்தைப பெற மாத்திரம் இன்று ஒன்றுமை தேவையில்லை நாட்டைப் பிறர் ஆக்ரமிக்காமல் பார்த்துக் கொள்ளவும் தேவை. காங்கிரஸ் ஏற்கவில்லை. காங்கிரஸின் எஜமானர் மக்கள். அவர்களிடம் முறையிடுவோம் என்பது ராஜாஜியின் கக்ஷி. மக்கள் ஆதரித்தால் காங்கிரஸ் ஏற்கும என்பது அவர் நினைவு. தவறுண்டோ அதில்? குறை கூறுவோர், குறுக்கிடுவோர் காங்கிரஸை உண்மையில் அறியவில்லை, ஆதரிக்கவில்லை என்று தான் நினைக்கவேண்டும். காங்கிரஸ் அதிகாரிவர்க்கப் போக்கை அநுசரிப்பது ஒழுங்கல்ல. அபிப்பிராயத்தை அடக்க முயல்வது தவருகும். கேட்கும் மக்களுக்கு பகுத்தறிவில்லையா? எவ்வளவு பெரியவராயிருந்தாலும் எதைச்சொன்னுலும் கேட்டுவிடுவாரா? நியாயமிருந்தால்தான் கேட்பர்; நம்பிக்கை யிருந்தால்தான் நடப்பர். அபிப்பிராயத்தை அடக்கி ஆள்வது அசாத்தியம். சரித்திர சித்தாந்தம் அது.

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்
எழுதியது

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

ஸ்ரீ ரகுவர! கருணகர! நீ பத-
சிந்தனமே ஜீவனமு

அனுபல்லவி

வாரண ரக்ஷக! பக்த ஜனக நி-
வாரண! ஸம்ம்ருது பாஷண! ஸத்குண!

சரணம்

1. மார! மாரநுத! நாமனவினி வினு-
மா ரமாரமண! மரவகுரா ஸுகு-
மார! மா ரஸனமுன நீ நாமமு
மாரு மாரு பல்கனு தய சேயுமு

2. வாரி வாரி மஞ்சிகி தகினட்டு
வாரி வாரி பாக்யமு லீவாதே
வாரி வாரி தானில! சம்பர ஜீ-
வாரி வாரி ஜாஸன ஜனக! ஹரே!

3. ராஜ ராஜ வந்தித பதயுக! தின-
ராஜ ராஜ நயன! பாலிதாமர
ராஜ! ராஜ பூஜித! ஸ்ரீ த்யாக-
ராஜ ராஜ! ராகவ! நனு ப்ரோவுமு

II

ஸ்ரீரகுவர!	—ரகுவம்சத்திலுதித்த சிறந்த வீரபுருஷனே!
கருணகர!	—அன்பாக்கிரங்குபவனே!
நீபதசிந்தனமே	—உன் திருவடி த்யானமே
ஜீவனமு	—எனது ஜீவனமாகக் கொண்டுள்ளேன்.
வாரண ரக்ஷக!	—கஜேந்திரனை ரக்ஷித்தருளியவனே!
பக்தஜன அக நிவாரண!	—பக்தர்களின் பாபங்களைப் போக்கடிப்பவனே!
ஸம்ம்ருது பாஷண!	—இனிமையாக ஸம்பாஷிப்பவனே!
ஸத்குண!	—உயர்ந்தகுணங்கள் உள்ளவனே!
மார!	—மன்மதனுக்கு நிகரான அழகு உள்ளவனே!
மாரநுத!	—மன்மதனுல் துதிக்கப்பட்டவனே!
ரமாரமண!	—லக்ஷ்மீ தேவியின் நாயகனே!
ஸுகுமார!	—அழகுநிறைந்த வடிவம் கொண்டவனே!
நாமனவினி	—என் விண்ணப்பத்தை
வினுமா	—கேட்டருள்வாய்
மரவகுரா	—என்னை மறந்துவிடாதே
மா ரஸனமுன	—எங்கள் நாவால்
நீ நாமமுன்	—உன் நாமாவளியான தாரக மந்திரத்தை
மாரு மாரு	—அடிக்கடி
பல்கனு	—சொல்லி மகிழும் வண்ணம்
தய சேயனு	—அருள் புரிவாய்
வாரி வாரி	—அவரவர்களின்
மஞ்சிகி தகினட்டு	—நல்ல ஸ்வபாவத்திற்குத் தகுந்தாற்போல்
வாரி வாரி	—அவரவர்களுக்குரிய
பாக்கியமுலு ஈவா?	—பாக்கியங்களைக் கொடுத்தருளக்கூடாதா?
தேவ அரி	—தேவர்களின் சத்ருக்களான
வாரித அனில	—மேகங்களுக்குப் பெருங் காற்றுப் போன்றவனே!
சம்பர ஜீவ அரி	—சம்பராசுரனின் உயிக்குக் காலனுக வாய்த்த "ப்ரத்யும்னன்"
வாரி ஜாஸன	—ப்ரஹ்ம தேவன் முதலானவர்களுக்கு
ஜனக	—தந்தையே!
ஹரே!	—ஸ்ரீ மஹா விஷ்ணுவே!
ராஜ ராஜ வந்தித பதயுக!	—ராஜாதி ராஜர்களாலும் வணங்கப்பட்டத் திருவடிகளை உடையவனே!
தினராஜ ராஜநயன	—சந்திர ஸூர்யர்களைக் கண்களாகக் கொண்டவனே!
பாலித அமர ராஜ!	—தேவேந்திரனை ரக்ஷித்தவனே!
ராஜ பூஜித!	—ஸகல அரசர்களாலும் வணங்கப்பட்டவனே!

கவர்ன்மேண்டில் வைத்ய நிர்வாஹ ஸபைகளில் மேம்பரும், கவர்ன்மேண்டுவைத்திய பட்டதாரியுமான
வைத்தியரத்ன பண்டிட்
யு. ராமநாத சாஸ்திரியாருடைய

(Examiner in Medicine & Clinics,)

(Govt. Diploma Examination, Etc)

'In Govt. of India Medical Dress.)

மஹா
பில்வாதி லேகியம்

பித்தம், வாந்தி, அன்னத்துவேஷம், அஜீர்ணம், உப்புஸம், புளியேப்பம், தலைச்சுற்றல், பித்த மயக்கம், பித்த வாயு, பலஹீனம், மலச்சிக்கல் இவைகளை தக்ஷணமே கண்டித்துவிடும். 1 சேர் கொண்ட டப்பி 1-க்கு ரூ. 3 வி. பி. வேறு.

ஆனந்த பற்பொடி

"மார்க்கட்டில் விற்கப்படும் இந்தியன் பற்பொடிகளுக்குள் ஆனந்த பற்பொடி ஒன்றுதான் மிக்க பிரஸித்தியுடன் எங்கும் பெயர்பெற்ற தென்பதற்குக் கொஞ்சம்கூட சந்தேகமே இல்லை" என்று சென்னை ஹைகோர்ட்டார் தீர்ப்பு செய்து இருக்கிருர்கள். எல்லா ஷாப்பு வியாபாரிகளிடமும் கிடைக்கும். போலிகளைக்கண்டு ஏமாராதீர்கள். நேரில் வருவோருக்கு கன்ஸல்டிங் சார்ஜ் கிடையாது. கேட்லாக் இனும்.

வைத்தியஸித்தாச்ரமம்,
39, பஜார் ரோட்,
மைலாப்பூர் : மதராஸ்.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம்

கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

வனஜாவின் கட்டுரை

கட்டுரை எழுத வேண்டும் என்ற ஆசை இல்லாதவர் யார்? யார் எப்படி ஆனாலும் இரண்டு வருஷமாக வனஜாவை இந்த ஆசை பிடித்து ஆட்டுகிறது. "நான் ஒரு கதை எழுதப் போகிறேன்; நான் ஒரு கதை எழுதப்போகிறேன்" என்று என்னை பயமுறுத்திக் கொண்டே வந்தாள். ஆனால் அவள் நினைக்கும் காரியத்தை சில வருஷங்களாவது இல்லாமல் செய்து விடமாட்டாள் என்பது எனக்குத் தெரியும். ஆகையினால் நான் அதிகக் கவலைபபடாமல் இருந்தேன். ஆனால் இந்த கவலையற்ற நிலை இரண்டு வருஷங்கள் தான் நிலைத்திருந்தது.

ஒரு ஞாயிற்றுக் கிழமை. அன்று எங்கும் வெளியில் போகாமல் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் எனறு தீர்மானித்திருந்தேன. பத்து மணிக்குச் சாப்பிட்டுவிட்டு 'ஈஸி சேரில்' சாய்ந்துகொண்டு வெற்றிலைப் பாக்குப் போட்டுக்கொண்டிருந்தேன். சிறிது நேரத்திற்குப பின் வனஜா அங்கே வந்து என்னை ஆச்சரியத்தோடு பார்த்தாள்.

"இன்னைக்கு என்ன இவ்வளவு பொறுமையா வீட்டிலெ தங்கியிருக்கேள்?"

"ரெஸ்ட் எடுத்துக்கப்போறேன்: நான் எங்கேயும் போகப் போறதில்லே?"

"மழைதான் வரப் போறது. உங்கள் ஸ்நேகிதாள் எல்லாரும் ஊருக்குப் போயிட்டாப்பலே இருக்கு!"

நான் பதில் ஒன்றும் சொல்லவில்லே. அவள் உள்ளே போனாள். நானும் கண்ணயர ஆரம்பித்தேன்.

அரை மணி நேரத்திற்குமேல் ஆகியிருக்கும். 'டக் டக்' என்று 'ஈஸி சேரை'த் தட்டும் சப்தம் கேட்டது. நான் சற்று திரும்பிப் படுத்துக்கொண்டேன். பிறகு 'ஈஸி சேர்' லேசாக ஆடியது. கண் விழித்துப் பார்த்தேன். அவள் என் முன் நின்று புனமுறுவல் செய்தாள். "என்ன விஷயம்?" என்று கேட்டேன. பின்புறம் வைத்திருந்த தன் கைகளை முன்னே கொண்டு வந்தாள். ஒரு கையில் பேனவும் மற்றொரு கையில் காகிதமும் இருந்தன. "அம்மாவுக்குக் கடிதமோ?" என்றேன் அலக்ஷியமாக.

"அதெல்லாம் ஒன்னும் இல்லே; நான் இப்போ ஒரு கதை எழுதப் போறேன்; அதைக் கொஞ்சம் திருத்தி ஏதாவது ஒரு பத்திரிகைக்கு அனுப்புங்கோ; எப்படி எழுதணுங்கரதையும் கொஞ்சம் சொல்லிக்கொடுங்கோ" என்று பதில் சொல்லி விட்டு கண்ணை ஒரு சுழற்றுச் சுழற்றினாள்.

எதிர்பாராத இந்த பதிலைக் கேட்டவுடன், இடியோசை கேட்ட நாகம் போல நான் நடுங்கிப் போனேன். இரண்டு வருஷமாக பயமுறுத்தி வந்த ஆபத்து இப்பொழுது எதிரே வந்து நிற்கிறதே! இதிலிருந்து தப்ப முடியுமா?, என்று யோசித்துக்கொண்டிருந்தேன்.

"என்ன? எழுதட்டுமா?" என்று அவள் மறுபடியும் கேட்டாள்.

"பேஷாய் எழுதேன். ரண்டு வாக்கியம் சரியா எழுதத் தெரியாதவாளெல்லாம் கதை எழுதற போது நீ எழுதினு என்ன?" என்று சொல்லி விட்டுக்கண்ணை மூடிக் கொண்டேன்.

"அப்படின்னு எனக்கு ரண்டு வாக்கியம்கூட சரியா எழுதத் தெரியாதுன்னு சொல்றேளா?"

"நான் உன்னை அப்படிச் சொல்லுவேனு? நீ தான் பக்கம் பக்கமா எனக்கு 'லெடர்'கள் எழுதி என்னைத் திணற அடிச்சிருக்கையே! நீ அர்த்தம் பண்ற லக்ஷணம் ரொம்ப நன்னு இருக்கு!"

"கதையினுடைய 'தீம்' என்னன்னு கேக்கலேயே?"

"கேக்கலெ"

"சொல்லட்டுமா?"

"உம்" நான் கண்ணை மூடிய படியே பதில் சொன்னேன்.

"ஒரு கிராமத்திலெ ஒரு பொண் இருக்கா... அவளுக்கு ரொம்ப வயஸாயிடறது... அவா ரொம்ப ஏழை... அந்தப் பொண்ணை யாரும் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்னுடரா.. ரொம்ப வரதக்ஷிணை கேக்கரா... அந்த ஊரிலெயே ஒரு பையன் இருக்கான்... அவன் 'அந்தப் பொண்ணையேதான் கல்யாணம் பண்ணிக்குவேன்'னு பிடிவாதம் பிடிக்கிருன்... பொண்ணும் அப்படியேதான்... ஆனு பிள்ளையினுடைய அம்மாவும் அப்பாவும் ரண்டாயிரம் ரூபாய் வரதக்ஷிணை கேக்கரா...பொண் ஆத்துக்காராளாலெ அப்படிச் செய்ய முடியல்லெ...கல்யாணப் பேச்சு முறிஞ்சு போறது...அந்தப் பொண், பிள்ளை ரண்டு பேருடைய மனஸும் முறிஞ்சு போறது..."

இதைச் சொல்லும்பொழுது நான் ஒரு பொய்க் குரட்டை விட்டேன். இதைப் பார்த்தவுடன் வனஜாவுக்குக் கோபம் வந்துவிட்டது.

"நீங்கள் கதை கேக்கிற லக்ஷணம் ரொம்ப நன்னு இருக்கு" என்று சற்று உரத்த குரலில் சொன்னாள்.

நான் தூக்கத்திலிருந்து திடீரென்று கண் விழிபபவன் போலப பாசாங்குசெய்துகொண்டு, "ம்...? என்ன சொன்னே?" என்று தூக்கக் கலக்கத்தில் கேட்பதுபோல் 'கீழ்ஸ்தாயி'யில் கேட்டேன்.

"நான் எழுதப் போற கதையைச் சுருக்கமாச் சொல்றேன்; நன்னு இருக்கா பாருங்கோ!"

"சொல் பார்ப்போம்!"

"பாதி சொல்லச்சே மறுபடியும் குரட்டை விடுவேளா?"

"இல்லே, சொல்லு."

"ஒரு கிராமத்திலே ஒரு பொண் இருக்கா.........கல்யாணப்பேச்சு முறிஞ்சு போறது..."

"அவா ரண்டுபேருடைய மனசும் முறிஞ்சு போறது..."

"அவா ரண்டுபேரும் தற்கொலை பண்ணிண்டுடறாளாக்கும்!"

"ஆமாம்! அது உங்களுக்கு எப்படித்தெரிஞ்சுது?"

"இது தெரியாதா? நீ எழுதற கதை எப்படி முடியும்னு தெரியாமெப்போனு வேறெ என்ன தெரியப்போறது!"

"முடிவு இப்படியே இருக்கலாமோன்னே?"

"ஏன் இப்படி முடிக்கணும்? அவா ரண்டு பேருக்கும் கல்யாணம் பண்ணி வைச்சூட்டேன்!"

"அப்படி முடிக்கறதா இருந்தா கதையுடைய 'தீம்' மொத்தத்தையுமே மாத்தணுமே!"

"ஏன் மாத்தணும்? கடைசிலே, 'அந்தப் பையனுடைய அப்பா அம்மா ரண்டு பேரும் திடீர்னு செத்துப் போரா; அப்பரம் அவன் தன் இஷ்டப்படி அந்தப் பொண்ணையே கல்யாணம் பண்ணிக்கருன்'னு முடியேன்."

"இது 'நாச்சுரலா' இல்லெ."

"மத்ததெல்லாம் 'நாச்சுரலா' இருக்காக்கும்!"

"கதை 'ட்ராஜடி'யா இருந்தாதான் படிக்கறவா மனஸைக் கவரும்; அதனுலெ எப்படி இருந்தாலும் கதையை இப்படித்தான் முடிக்கப் போறேன்."

"அப்படின்னு என்னை எதற்குக் கேட்டெ?"

"அது எப்படியானும் இருக்கட்டும்; 'தீம்' நன்னு இருக்கோ இல்லையோ?"

"பேஷா இருக்கு. பத்திரிகாலயத்திற்குப் போயிட்டு வர இவ்வளவு 'தீம்' அதிகம்னு கூடச் சொல்லணும்."

"மொதல் மொதல்லெ ஆசீர்வாதம் பண்றதைப் பாரு!"

"வேண்டாம்; கட்டுரை திரும்பி வர வேண்டாம்; அது பத்திரிகை ஆபீஸிலேயே இருக்கட்டும்: 'ஸ்டாம்ப்' வைக்காமல் அனுப்பினு அங்கேயே இருக்கு!"

"நீங்க பரியாஸம் பண்றதையெல்லாம் பண்ணிண்டு இருங்கோ; அது உங்க கண் எதிரெயே 'பப்ளிஷ்' ஆகப் போறது; அப்பொ நான் பாத்துக்கறேன்."

"ஆனு எனக்கும் ரொம்ப ஸந்தோஷம் தான். நம் வனஜா ஒரு பெரிய கதாசிரியையாகப் போயிட்டான்னு நினைச்சுக்கறேன்; உன் கட்டுரையை என் சினேகிதர்களுக்கெல்லாம் வாசிச்சுக் காட்டி, 'இது சாதாரண கட்டுரை இல்லே. எங்க 'மிஸ்ஸி' எழுதினது' அப்படீன்னு சொல்லி பெருமை அடிச்சுக்கறேன்!"

"அப்பொ உங்க பத்திரிகைக்குக்கூட வருஷ மலருக்கு ஒரு கதை எழுதச் சொல்லி என்னைக் கேம்ப்பேள்; அப்பொ எழுதித்தரேனு பாருங்கோ" என்று குழந்தையைப்போல் பேசினாள். நான் மனதிற்குள்ளேயே சிரித்துக் கொண்டேன்: அப்பொழுதே அவள் ஒரு பெரிய ஆசிரியை ஆகிவிட்டது போன்ற சந்தோஷம் அவள் முகத்தில் பொங்கி வழிந்தது. அவள் எழுத உட்கார்ந்தாள்; நான் மறுபடியும் தூங்க ஆரம்பித்தேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் முன்போல் 'டக் டக்' என்ற சப்தம் கேட்டது. கண்ணைத் திறந்து பார்த்து, "எழுதியாச்சா?" என்று கேட்டேன்.

"இல்லே, கதையை எப்படி ஆரம்பிக்கலாம்?" என்று கேட்டாள் வனஜா.

அவள் பேனவின் பின் புறத்தால் தன் மோவாக்கட்டையைத் தட்டிக்கொண்டிருந்தாள்.

"மனோகரமான மாலை வேளை. கதிரவன் தன் பொற்கிரணங்களைப் பூமியின்மீது பொழிந்த வண்ணம் மேற்குக் கடலில் மூழ்கிக்கொண்டிருந்த காக்ஷி காண்போர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இளம் தென்றல் காற்று 'ஜிலு ஜிலு' என்று வீசிக்கொண்டிருந்தது. துறவியும் இல்லறம் நாடக் கூறிய இந்த வேளையில் நம் கதாநாயகனுன குணசேகரன் தோட்டத்தினுள்ளே பிரவேசித்துப் பளிங்கு போலிருந்த குளக்கரையின் படியில் உட்கார்ந்தான் அவன் வரவை எதிர்பார்ப்பவளே போல் நம் கதாநாயகியான பிரதாப சுந்தரி அவனுக்கு முன்னரே அங்கு வந்து உட்கார்ந்து கொண்டு ஏக்கத்தில் மூழ்கியிருப்பதை அவன் கண்டு 'என் கண்ணே! யாது காரணம் கொண்டு நீ இங்ஙனம் சோக ஸாகரத்தில் அமிழ்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கிருய்?' என்று வினவினுன் என்று ஆரம்பியேன்"

"நீங்கள் என்னைப் பரிகாசம் செய்கிறீர்களா என்ன? எதாவது கேட்டால் நேரா பதில் சொல்றதே இல்லே; இது இனிய செந்தமிழ் நாவல் நடையா இருக்கு. இப்படி இப்போ யார் கதை எழுதரு?"

"இப்போகூட எவ்வளவோ பேர் இப்படி எழுதரு: அதனுலேதான் சொன்னேன்; இதிலே என்ன பரியாஸம் இருக்கு? இது பிடிக்கல்லேன்னு வேறெ மாதிரி எழுதேன்."

அதற்கு மேல் ஏதாவது பரிகஸித்தால் அவள் கோபித்துக் கொண்டு விடுவாள் என்று தோன்றியது. அதனுல் என் தொனியைச் சிறிது குறைத்துக் கொண்டேன்.

"முதல்லெயே 'டயலாக்' ஆரம்பிச்சூட்டா?"

"நன்னு இருக்கும்; அப்படித்தான் ஆரம்பி."

வனஜா பேனவைக் காகிதத்தின் மேல் நாட்டினுள்; பேனு கிரு கிரு என்று ஓடியது. அவள் காகிதத்தில் விவரித்துக் கொண்டிருந்த உணர்ச்சிகள் எல்லாம் அவள் முகத்தில் பிரதிபலித்தன ஒரு சமயம் அவள் கண்களில் ஜலம் கூட வந்து விட்டது. அப்பொழுது அவள் கதா நாயகி

(அடுத்த பக்கம் பார்க்க)

சிறு கதை

★

"வாணிசரண்" எழுதியது

கிளிச் சட்டம்

★ "ரேவதி" எழுதியது

"பாட்டியம்மா! தையற்காரன் வந்தூட்டான்! பாபா சட்டை கொண்டு வந்திருக்கான்!" என்று கூச்சலிட்டுக் கொண்டே அலமு உள்ளே ஓடினாள்,

கூடத்தில் ஒரு தொட்டிலை புஷ்பங்களினுல் அவள் சித்தி சாரதா அலங்கரித்துக்கொண்டிருந்தாள்.

"உஸ். சப்தம் போடாதே! பாபா எழுந்திருக்கப் போரது!' என்று அலமுவை எச்சரித்தாள்.

"சித்தி! பாபா சட்டை வந்துடுத்து! அதுக்குப் புதுச்சட்டை போட்டுக்கப் போறோம் என்று தெரியுமோ?". என்று கேட்டாள்.

"ஒன்னும் தெரியாது! பாபாவுக்கு இப்போ பசி ஒன்னுதான் தெரியும். அழத் தெரியும்!" என்றுள் சாரதா.

இதற்குள், சமையல் அறையில் இருந்து அலமுவின் பாட்டி மீனுக்ஷியம்மாள் ஒரு கரண்டியில் கொஞ்சம் கடலைச் சுண்டலை எடுத்துக்கொண்டு வந்தாள்.

"உப்புப்போட்டேனு இல்லையா என்று ஞாபகம் இல்லே! இதைச் சத்தே வாயிலே போட்டுண்டு பாரேன்!" என்று சாரதாவிடம் சுண்டலை நீட்டினுள். தையல்காரனும் சட்டையுடன் உள்ளே வந்தான். துணி மூட்டையை அவிழ்த்துச் சட்டையை வெளியே எடுத்தான்.

"உப்புப் போறும்! சட்டைக் கையை தாராளமாக வைக்கப் படாதா?" என்றுள் சாரதா.

"சரியாக இருக்கும்!" என்று கூறிவிட்டுக் கூலியை வாங்கி கொண்டு அவன் சென்றுன். "எவ்வளவு அழகான சட்டை! தொட்டிலையும் சித்தி நன்ருகத்தான் அலங்கரித்து இருந்தாள். சுண்டலும் ருசியாகத்தான் இருந்தது. ஆனுல் அந்தப் பாபாவுக்குத்தான் இதெல்லாம் தெரியாதே! புதுச் சட்டை என்று தெரியாத பாபாவுக்கு எதுக்காக இவ்வளவு தடபுடல் படுத்தணம்? தனக்குமட்டும் இந்தப் பட்டில் தைத்திருந்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்? இந்தப் பெரியவாளே இப்படித் தான்!" என்று பலவித எண்ணங்களில் அலமு ஆழ்ந்தாள்.

பாட்டியம்மா காரியமாக உள்ளே சென்றுவிட்டாள். தொட்டிலைச் சிங்காரித்து முடித்த சாரதா, சற்று தூர நின்று அழகு பார்த்தாள்.

"இது மேல் தொங்கவிட என்ன வேணும் தெரியுமோ, அலமு?" என்று கேட்கவே, அலமு திடுக்கிட்டுத் திரும்பினுள்.

"என்ன சித்தி?" என்று ஆவலுடன் கேட்டாள்.

"ஒரு கிளிச் சட்டம், நாளை நான் காலேஜில் இருந்து வர போது வாங்கிகொண்டு வரேன்! முந்தாநாள் ஒருத்தன் கொண்டு வந்தான்!" என்றுள்.

"கிளிக்கூண்டா சித்தி? அதில் கிளி இருக்குமா?" என்று அலமு கேட்டாள். "ஆமாம்". என்று கிளிச் சட்டத்தை எப்படித் தொங்கவிடலாம் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்த சாரதா தலையை அசைத்தாள்.

அலமுவுக்கு ஆனந்தத்தில் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது: அன்று குழந்தைக்குத் தொட்டில் போட்டது, எல்லாரும் வந்து வெற்றிலைபாக்குச் சுண்டல் வாங்கிக் கொண்டு சென்றது, அந்த ஒன்றுமே தெரியாத ஜடம் பாபாவுக்கு அவர்கள் சட்டைகள், வெள்ளி கிலுகிலுப்பை எல்லாம் கொண்டு வந்து கொடுத்தது, இவை யாவையும் ஒரு சொப்பன உலகில் நடப்பது போலிருநதது. இரவு மணி ஏழாகிவிட்டது. வந்தவர்கள் சென்று விட்டார்கள். அலமுவின் தாயாரும் பாபாவுக்குப் பால் கொடுக்கக் குழந்தையை எடுத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

"சித்தி இன்னிக்கு ஒரு வேளை காலேஜ் போகாமல் இருந்து விடுவாளோ? நாளைக் காலை கிளி வராதோ?" என்ற சந்தேகம் அலமுவின் மனதில் தோன்றவே அவள் அசைவற்றுநின்ருள். பிறகு "சித்தி, உனக்குப்புறப்பட நாழிகை ஆகவில்லையா?" என்று கேட்டாள்.

"ஐந்து வயதுக் குழந்தைக்குப் பெரியவா காரியத்தில் இப்படி முந்திரிக்கொட்டையாட்டமா"? என்று மீனுக்ஷி அம்மாள் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, "இல்லே அம்மா அலமு சொல்லுவது சரிதான். இன்னிக்கு நான் போய்த்தான் ஆக வேண்டும்! நாளைக்குக் காலையில் சாப்பாட்டுக்குவரேன்" என்று சொல்லிவிட்டுச் சாரதா சென்ருள்.

இரவு முழுக்க தான் கிளியுடன் விளையாடுவதாகவும், அதுக்கு அலமு என்று பேசச் சொல்லிக் கொடுப்பதாகவும், பழம் கொடுப்பதாகவும் அலமு கனுக்கண்டாள். காலையில் பக்கத்தாத்துப் பையனிடம் சாரதா கொண்டுவரப் போகும் கிளியைப்பற்றிச் சொன்னுள். தான் கூண்டின் கதவைத் திறந்துவிடவே, அது வெளியில் தப்பி ஓடிவிட்டது; அதைத் தான் துரத்துவதாக பாவனை செய்து, பாட்டியம்மா மேல் விழுந்து வசவு வாங்கினுள். எப்படியோ மணியும் பத்து ஆகிவிட்டது. சித்தி வரும் சமயம். இலையில் தனக்குக் கொஞ்சமும் பிடிக்காத சீரக ரசச் சாதத்தைத் தன் பாட்டி போட்டிருப்பதைக் கூட கவனிக்காமல், சித்தி வரும் ரிக்ஷா சப்தத்தைக் கவனித்தாள்.

சாரதா வெறுங்கையுடன் உள்ளே வந்தாள். அலமு பிரமித்துப் போனுள். "சித்தி, கிளிக் கூண்டு கொண்டு வரலையா?" என்று ஏக்கத்துடன் கேட்டாள். "இதோ கூடத்தில் வைத்திருக்கேன்!" என்று சொல்லி சாரதா ஒரு கிளிச் சட்டத்துடன் திரும்பி வந்தாள். நன்னு இருக்கா? என்ருள்.

அலமு திகைத்துப் போனுள். இதுவா சித்தி சொன்ன கிளிக் கூண்டு? வெல்வட்டினுல் தைத்து மூக்கில் மணியை வைத்திருக்கும் இந்த ரூபமற்ற உயிரற்ற பொம்மைகளா கிளிகள்? பச்சை வர்ணமுள்ள நீண்ட இறக்கைகள், வளைந்த சிகப்பு மூக்கு, அழகிய கொண்டை என்று அவள் மனதில் சித்தரித்திருந்த உயிருள்ள கிளிக்கும், ஒரு சட்டத்தில் தொங்கும் இந்த விளையாட்டுச் சாமான் களுக்கும் உள்ள வித்தியாசத்தை என்ன என்று சொல்லுவது!

கண்ணீர் மல்கும் கண்களுடன் தன் தட்டைப் பார்த்தாள். சீரக ரசச் சாதம்! அலமுவுக்கு வாழ்க்கையே சூனியமாகி விட்டது போலிருந்தது! தட்டைக் கையில் தூக்கி படாரென்று கீழே போட்டாள்! வெள்ளோட்டுத் தட்டு சிதறுண்டு உடைய சாதம் நாலா பக்கமும் வாரி இறைந்தது!

★

விவாஹம்



ஈரோடு ஸி. எஸ். டி. லிமிடெட் மானேஜர் சிரஞ்சீவி ராஜப்பா என்கிற ஸ்ரீனிவாஸனுக்கும், ஸ்ரீ கே. எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் குமாரத்தி சௌ. ஷண்பகவல்லிக்கும் சமீபத்தில் விவாகம் நடைபெற்றது.

வனஜாவின் கட்டுரை

(முன் பக்கத் தொடர்ச்சி)

கஷ்டப்படும் கட்டத்தை எழுதிக் கொண்டிருந்தாள் போலிருக்கிறது. இப்படி ஒரு மணி நேரம் எழுதிக் கட்டுரையை ஒருவாறு முடித்தாள்.

"இதற்கு என்ன தலைப்புப் போடலாம்?"

"வரதக்ஷிணைக்குப் பலி என்று போடு."

"அது நன்னு இல்லே; வேறு ஏதாவது அழகாச் சொல்லுங்கோ!"

"காதலா, சாதலா?"

"இது கூட எனக்குப் பிடிக்கல்லெ; இன்னொரு தலைப்பு சொல்லுங்கோ பார்ப்போம்."

"அக்கினிப் பிரவேசம்!"

"பேஷ்! உங்க யோசனையே தனிதான், அந்தமாதிரி கற்பனு சக்தி ஒரு எழுத்தாளருக்கும் கிடையாது;"

"அவள் என் கற்பனு சக்திக்கு ஒரு ஸர்டிபிகேட் கொடுத்தவுடன் எனக்கு உச்சி குளிர்ந்து விட்டது. எப்படியாவது இந்தக் கட்டுரை ஒரு பத்திரிகையில் பிரசுரமாகும்படி செய்து விட்டுத்தான் மறு வேலை என்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

"இதைக் கொஞ்சம் படிச்சுப் பாருங்கோ."

"கதையைத்தான் முதல்லெயே சொல்லிவிட்டையே! இதை மறுபடியும் என்னத்துக்குப் படிக்கணும்?"

"சரி, சரி; நீங்கள் நாளைக்கே ஏதாவது கதை எழுதாமல் இருக்கப் போறதில்லே; அப்பொ அதை என் கிட்டக் கொடுத்து 'இது நன்னு இருக்கா பாரு'ன்னு சொல்லப் போறேன்; அப்பொ எப்படி நடந்துக்கணும்னு எனக்குத் தெரியும்"

என் நிலைமை அப்பொழுது தான் எனக்கு ஞாபகம் வந்தது. என் கட்டுரைகளைப்படித்து அவை நன்ருக இருக்கின்றன என்று சொல்லக்கூடிய நபர் வனஜா ஒருத்தி தான். ஆகையினுல், "ஸரி, இங்கே கொண்டா!" என்று கையை நீட்டினேன்.

"இருங்கோ இருங்கோ: நான் என்ன புனைப பெயர் வைச்சுக்கலாம்."

"கரையான் என்று வைச்சுக்கோ"

"ஏன்?"

"இந்தக் கட்டுரையை எழுதி முடிக்கிறதுக்குள்ளே என்னை எவ்வளவு அரித்துவிட்டாய்? அதனுல் தான்."

"எனக்குப் புனைப் பெயரே வேண்டாம், இதைப் படிச்சுப் பார்த்து கொஞ்சம் 'டச்' பண்ணிக் கொடுங்கோ; 'ப்ரஸண்டேஷன்' நன்னு இருக்கா பாருங்கோ."

"நான் சிவப்பு மசிப் பேனுவை எடுத்துக் கொண்டு கதையை 'டச்' பண்ண ஆரம்பித்தேன். வழக்கத்திற்கு விரோதமாக ஐந்து நிமிஷத்திற்குள், அன்று முதல் தரமான காபி போட்டு ஒரு டம்ளர் நிறையக் கொண்டு வந்து என் முன்னே வைத்தாள் வனஜா.

பலாத்காரமும் பயமுறுத்தலும்

★

ஜெர்மன் வேவுமுறைகள்

★

'நியாயவாதி' எழுதியது

நாஸிகளின் எழுச்சிக்குப் பின், வேவு பார்ப்பதில் பலாத்கார முறைகள் கையாளப்பட்டு வருகின்றன என்று கூறப்படுகிறது. இதில் ஓரளவு உண்மை எனினும், அம்முறைகள் அதற்கு முன்னரும் அனுஷ்டிக்கப்பட்டு வந்தன என்பது வாஸ்தவமே. பண்டைக் காலத்திலிருந்தே வேவுகாரர்கள் தங்களது முயற்சிகளில் பலாத்காரத்தையும், பயமுறுத்தலையும் காட்டி அவற்ருல் பயன் பெற முயன்றனர் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் இருக்கின்றன.

வேவு புரிவது சாமான்ய விஷயமன்று. அது சாதாரண மனிதன் செய்யக்கூடிய காரியமன்று. அன்னிய நாட்டிலோ அல்லது எதிரிகளிடையேயோ உளவு பார்க்கச் செல்பவனது நிலைமையைக் களவுத் தொழில் செய்ய புகுபவனது நிலைமைக்கு ஒப்பிடலாம். காரியசித்திக்குக் குறுக்கே நிற்கும் சட்ட திட்டங்களையும் நியாயவிதிகளையும் அவர்கள் மதிப்பதில்லை. சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு உபாயங்களையும் அவர்கள் கைக் கொள்ளுவார்கள். அவசியம் ஏற்பட்டால் பலவந்த முறைகளையும் பிரயோகிக்க அவர்கள் கூச மாட்டார்கள்.

ஹிட்லரின் ஆதிக்கயத்தின் கீழ் 'ஜெஸ்டாப்போ' என்ற ரகசிய போலீஸ் ஏற்பட்ட பின் பலாத்கார முறைகளே பெரும்பாலும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. லஞ்சம், பயமுறுத்தல், களவு, கொலை—இவற்றை நாஸி வேவுகாரர்கள் கையாண்டு வருகின்றனர். இதர நாடுகளின் வீழ்ச்சிக் கென்றே தயாரிக்கப்படும் ஐந்தாம் படைகளுக்கு பிரத்தியேகமான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

பலாத்கார முறைகள்

இனி, ஜெர்மன் வேவுகாரர்களால் கையாளப்படும் பலாத்கார முறைகளை கவனிப்போம்.

அவற்றில் முக்கியமானது பயமுறுத்தல் என்பது. அதாவது எவனால் எந்த காரியம் ஆக வேண்டுமோ அவனை உளவாளி பயத்தால் தன் வசப்படுத்தி அக் காரியத்தை சாதித்துக் கொள்ளுவதே. இதை விளக்க, பின் வரும் உதாரணத்தை கவனிப்போம்.

ராஜாங்கத்தில் ராணுவ இலாகாவில் உள்ள ஒரு உத்தியோகஸ்தன்—கண்ணியமான அந்தஸ்தும், பொறுப்பு வாய்ந்த பதவியும் உடைய ஒரு உத்தியோகஸ்தன்—ஒரு அன்னிய நாட்டு வேவுகாரனின் திருஷ்டியில் விழுகிருன். அவ்வுத்தியோகஸ்தனிடமிருந்து ராணுவ இலாகாவைப்பற்றிய சில ரகசிய தகவல்களை அவ்வேவுகாரன் அறிந்து கொள்ள முயலுகிருன். அவன் லஞ்சத்துக்கு வசப்படாதவன் என்பது பிரஸித்தம். வேவுகாரனது எண்ணம் எப்படி நிறைவேறும்?

அவ்வுத்தியோகஸ்தனது வாழ்க்கையில் ஏதேனும் களங்கமான ரகசியம் இருக்கக்கூடும். அந்த ரகசியத்தை வேவுகாரன் எப்படியோ அறிந்து கொள்ளுகிருன். அது சம்பந்தமான ருஜுக்கள் எப்படியோ அவனது கையில் சிக்கிக்கொள்ளுகின்றன.

உடனே அவன் அந்த உத்தியோகஸ்தனிடம் சென்று "உனது ரகசியத்தை நான் அறிவேன். அது சம்பந்தமான ருஜுக்கள் என்னிடம் இருக்கின்றன. என் விருப்பத்தின்படி நீ நடக்காவிட்டால் உனது ரகசியம் பகிரங்கத்துக்கு வந்து விடும். என்னிடமுள்ள ருஜுக்கள் பொதுஜனங்களின் நாட்டத்தில் வந்து விடும். அதனால் ஏற்படும் அவமானத்தை உன்னால் சகிக்க இயலுமா? வெளியே தலை காட்ட உனக்கு யோக்கியதை வருமா?" என்று பயமுறுத்துகிருன்.

பாவம்! உத்தியோகஸ்தனின் நிலைமை பரம சங்கடமானது என்பதில் ஐயமில்லை. மானத்தைக் காப்பாற்றுவதற்காக அவன் தனது இலாகாவின் ரகசியங்களை ஒற்றனிடம் காட்டிக் கொடுக்க இணங்குகிருன்.

உண்மை எது?

இப்பயமுறுத்தல் முறை தொன்று தொட்டகால முதல் கையாளப்பட்டு வந்தது. செப்ஸாரின் வேவுகாரர்கள் இதை பலவிதங்களில் பயன்படுத்திக்கொண்டனர். சென்ற மஹாயுத்தத்தில் ஒரு ரஷ்ய தளபதி ஜெர்மன் வேவு இலாகாவுக்கு கீழ் படிந்து நடந்து வந்தான். பணத்தாசை கொண்ட அவன் ஜெர்மனிய உளவுகாரர்கள் கொடுத்த லஞ்சத்துக்கு இணங்கி தனது தேசத்துக்குத் துரோகம் செய்யத் துணிந்தான் என்று கூறப்படுகிறது. ஆனல் இது உண்மையன்று. விஷயம் என்னவெனில் அவனுடைய ரகசியத்தை ஜெர்மன் வேவுகாரர்கள் உணர்ந்து அவனை பயமுறுத்தி அவனை தங்கள் வசப்படுத்தி விட்டனர். ஒரு ஸமயத்தில் அவன் ராஜ குடும்பத்தைச் சேர்ந்த ஒரு பெண்ணுடன் கள்ள நட்பு கொண்டிருந்தான். இந்த விஷயம் எப்படியோ ஜெர்மன் வேவு இலாகாவுக்குத் தெரிந்து விட்டது. அது ஸம்பந்தமான ருஜுக்களும் அதற்கு அகப்பட்டன. அப்புறம் கேட்கவேண்டுமா? தளபதியின் பாடு திண்டாட்டமாகி விட்டது. ஜெர்மன் வேவுகாரர்களது மிரட்டலுக்கு அவன் உடன்பட வேண்டியதாயிற்று.

அப்படி அவன் உடன்படாவிடில் அவனது ரகசியம் ரஷ்ய சக்ரவர்த்திக்கு எட்டி விடும். அப்புறம் அவமானமும் இழிவும் தான். ஆதலால் அவன் ஜெர்மன் வேவுகாரரது பயமுறுத்தலுக்கு இணங்கியது ஒரு ஆச்சரியமன்று. அவ்வப்போது அவனால் எதிரிகளுக்கு அனுப்பப்பட்ட செய்திகள், அவர்களுக்கு மிகுந்த உபயோகமானவையாயிருந்தன. கிழக்குப் போர்முனை ஜெர்மன் படைகள் வெற்றிக்கு மேல் வெற்றி பெற்றன. தனது துரோகத்தால் தனது சேனைக்கு ஏற்பட்ட அபகீர்த்தியையும் தனது நாட்டுக்கு உண்டான நஷ்டங்களையும் கண்டு சகிக்கப் பொறாத அத்தளபதி தற்கொலை செய்து கொண்டான்.

பயமுறுத்தல் முறையை நாஸிக்கள் ஒருதலையாக வளர்த்துள்ளனர் எனலாம். அவர்களால் கையாளப்படும் தந்திரங்கள் ஆச்சரியகரமானவை. சமயா சந்தர்ப்பத்துக்கு எப்படி நடக்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும். எப்படியாவது தாங்கள் எடுத்துக்கொண்ட காரியம் கைகூட வேண்டும் என்ற ஒரே எண்ணம்தான் அவர்களுக்கு; காரியசித்தி பெறுவதற்காக அவர்கள் காட்டும் உருட்டலும் மிரட்டலும் பயங்கரமாகவே இருக்கும்.

மிரட்டல் முறை

நாஸிக்களின் மிரட்டல் முறைகளை விளக்கும் இரு கதைகளை இனி குறிப்பிடுவோம்.

1938-ம் வருஷ மத்தியில் ஸுடேடன் பிரச்னை ஐரோப்பாவை யுத்த நெருக்கடியில் கொண்டு விடும் என்று அஞ்சும்படியாய் இருந்தது. அச்சமயம் பிரிட்டனின் ஆதரவு ஜெர்மனிக்கு முக்கியம் என்று நாஸிக்கள் கருதினர். பிரிட்டனில் பொதுஜன ஆதரவை தங்கள் பக்கம் திருப்பவும் அவர்கள் முயன்றனர்.

இந்த உத்தேசத்துடன் பிரிட்டனில் உழைத்த ஒரு ஜெர்மன் உளவாளி ஒரு ஆங்கில சீமாட்டியைத் தனது காரியத்துக்கு உபயோகப்படுத்திக் கொள்ள தீர்மானித்தான்.

அந்தச் சீமாட்டி உயர்ந்த சமூகத்தில் பழகுபவள். அவளது கணவனுக்கு அரசியல் வட்டாரங்களில் நல்ல மதிப்பு இருந்தது. மனைவியைப் பயமுறுத்தலால் வசப்படுத்தி அவள் மூலம் அவளது கணவனை ஜெர்மனியின் சார்பாகப் பிரசாரம் பண்ணும்படி செய்ய வேண்டும் என்பது வேவுகாரனின் யோசனை.

அவன் அச்சீமாட்டியின் வாழ்க்கையில் மறைந்துள்ள ஒரு ரகசியத்தை அறிவான். அவள் கன்னிகையாயிருந்த பொழுது வேறொரு கனவானுடன் நெருங்கிய நட்பு கொண்டிருந்தாள். அக்காலத்தில் அவ்விருவரும் காதலர்களே என்று நினைக்கும்படியாய் இருந்தது அவ்விருவரது நெருங்கிய ஒழுக்கம்.

சில காலத்துக்குப்பின் அவ்விருவரும் பிரிந்துவிட்டனர். ஒருவர் மற்றவரை மறந்துவிட்டார் என்றே சொல்லலாம். சீமாட்டி ஒரு கண்ணியமான கனவானை மணந்தாள். அவளது மாஜி காதலன் வேறொரு ஸ்திரீயை மணந்தான். ராணுவத்தில் உத்தியோகம் வகித்த அவன் தனது பட்டாளத்துடன் சேலம்ஊம்படி நேரிட்டது; தனது பழைய கதை யாருக்கும் தெரியாத ரகசியம் என்று சீமாட்டி நினைத்தாள். அதை அவள் தனது கணவனுக்குத் தெரிவிக்கவில்லை. தன்னையே அவன்முன் இழிவுபடுத்திக் கொள்ள அவள் விரும்பவில்லை. மேலும் அதை அவன் உணர்ந்த அவன் தன் மீது கொண்ட காதல் வெறுப்பாக மாறிவிடும் என்று அவள் அஞ்சினள்.

ஆனல் அந்தப் படுபாவி ஒற்றனுக்கு அவ்விரு ரகசியம் எப்படியோ தெரிந்துவிட்டது. அதை அவன் முற்றிலும் பயன்படுத்திக்கொள்ள விரும்பாமல் இருப்பானா?

சீமாட்டியை பயமுறுத்தியது

சீமாட்டியை தனியே சந்தித்த அவன் அவளது ரகசியத்தை கூறி, "எனது நிபந்தனைக்கு நீ இணங்காவிட்டால் உனது இரகசியம் உனது கணவருக்குத் தெரியப்படுத்தப்படும். அப்புறம் உன் கதி அதோ கதிதான்" என்று பயமுறுத்தினன்.

சீமாட்டியின் முகம் வெளுத்தது. "உனது நிபந்தனை என்னவோ?" என்று வினவினள்.

ஒற்றன், "அதில் பிரமாதம் ஒன்றுமில்லை. ஸுடேடன் பிரச்னைக்கு எங்கள் தரப்பில் ஆதரவு தேடுகிறோம். நீ உன் சபையை எங்கள் பக்கம் திருப்ப வேண்டும். பொதுஜனக் கூட்டங்களில் அவன் ஜெர்மனிகட்சி தான் நியாயமானது என்று கூற வேண்டும்" என்ருன்.

அது விஷயமாய் தனது முடிவைக் கூறுவதற்கு சீமாட்டி மூன்று நாட்கள் தவணை கேட்டாள். ஒற்றனும் அதற்கு சம்மதித்தான்.

மகா சங்கடமான நிலைமையிலிருப்பினும் சீமாட்டி தனது நிதானத்தை இழக்கவில்லை. உடனே அவன் தனது மாஜி காதலனுக்கு ரகசியமாய் செய்தி அனுப்பி விஷயத்தை முற்றிலும் தெரியப்படுத்தினள்.

மூன்று நாட்களுக்குப் பின் ஒற்றன் சீமாட்டியைப் பேட்டி கண்டான். ஆனல் அச்சமயம் அவள் தனியே இருக்கவில்லை. அவள் அருகில் அவளது மாஜி காதலனான ராணுவ உத்தியோகஸ்தன் நின்றிருந்தான்.

கோபமே உருவெடுத்தாற் போல் சீறிய அவ்வுத்தியோகஸ்தனைக் கண்டதும் வேவுகாரன் திடுக்கிட்டான். அவன் கையில் இருந்ததைப் பார்த்தவுடன் அவனது உடல் நடுங்கியது. ஸுடேடன் பிரச்னையைப்பற்றி பிரஸ்தாபித்தால் தனக்கு சாட்டையடி கிடைக்கும் என்று அவன் அஞ்சினன்.

"இந்த சீமாட்டி இருக்கும் திக்கில் நீ இனி காலெடுத்து வைப்பாயானல் உன் மூதுகுத் தோல் உரிந்து விடும்; உஷார், போ வெளியே" என்று அதட்டினன் ராணுவ உத்தியோகஸ்தன்.

மறு வார்த்தை பேசாமல் ஒற்றன் அவ்விடத்தைவிட்டு நீங்கினன். அவனது யத்தனம் அவமானத்திலும் ஏமாற்றத்திலும் முடிந்தது.

சில தினங்களுக்குப் பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பிரசங்கம் புரிந்த சீமாட்டியின் புருஷன் ஸுடேடன் பிரச்னையில் ஜெர்மனி காட்டிய மனோபாவத்தை பலமாய்க் கண்டித்தான். மேடையில் அவன் பக்கத்தில் வீற்றிருந்த அவன் மனைவி அவனது அபிப்பிராயத்தை ஆமோதித்து தலையை ஆட்டிக்கொண்டே யிருந்தாள்.

* * * *

அரண் மர்மம்

செகோஸ்லோவோகியாவுக்கும் ஜெர்மனிக்கும் நடுவில், உள்ள எல்லையில் செக் சர்க்காரால் கட்டப்பட்ட "மாகினே" அரணைப்பற்றி அபிப்பிராயபேதம் இருந்தது. ஒரு சாரர் அது மிக்க பலமான பந்தோபஸ்துகளுடன் கூடியது என்றும் ஜெர்மன் சேனையால் அக்காவலை கடக்க முடியாதுஎன்றும் கூறினர். மற்றொரு சாரர் அது வெறும் பொம்மைச் சிங்காரம் என்றும் அதை ஹிட்லர் தவிடு பொடியாக்கக்கூடும் என்றும் கூறினர். அவ்வரணின் உண்மையான யோக்கியதை ஒரு மர்மமாக இருந்தது.

ஆனல் ஹிட்லரின் வேவுகாரர்கள் சும்மா இருப்பார்களா? செக் அரணைப்பற்றிய ரகசியங்களைக் கண்டுபிடிப்பதில் தங்கள் முழு கவனத்தை செலுத்தினர்.

காப்டன் பிராட் செத் என்பவன் செக் ராணுவத்தில் ஒரு உத்தியோகஸ்தன். அரண் காவலில் ஈடுபட்டவன். அதைப்பற்றிய ரகசியங்கள் அவனுக்குத் தெரியும். ஸ்லோவோகியாவிலுள்ள ஒரு புராதன குடும்பத்தில் பிறந்த அவன் தனது நற்பெயரிலும் கௌரவத்திலும் அக்கரையுடையவன்.

ஆனல் அவனுக்கு ஒரே ஒரு துர்க்குணம் இருந்தது. அழகிய மங்கையருடன் சல்லாபம் செய்வதில் அவனுக்குப் பிரியம் அதிகம். இதுவே அவனது வீழ்ச்சிக்குக் காரணமாய் முடிந்தது.

ஒரு சமயம் அவன் ஒரு நர்த்தனச் சாலையில் ஒரு அழகிய மங்கையை சந்தித்தான். அவளது இனிய முகமும் இன்பகரமான பேச்சும் அவனது அறிவை மயக்கின. அவளுடன் அடிக்கடி குலாவி மகிழ அவன் விரும்பினன். அதற்கு அவள் இணங்குபவள்போலத் தோன்றினள்.

இருவரும் அடிக்கடி சந்தித்து சல்லாபம் செய்லாயினர். பெண் மோகத்தால் புத்தியை யிழந்த காப்டன் தன் காதலியுடன் பிரியாமல் இருக்கும் காலம் எப்பொழுது வரும் என்று ஏக்கமடைந்தான்.

இடி விழுந்தது

ஆனல் அவன் கட்டிய இன்பக் கோட்டையில் இடி விழுந்தது; ஒரு நாள் அவனும் அவனது காதலியும் கூடிக் களித்துக்கொண்டிருந்த ஸமயம் அவர்கள் இருந்த அறையுள் ஒரு மனிதன் பிரவேசித்தான். கோப வெறியுடன் விழித்த அவன் காப்டனை விழுங்கி விடுபவன் போல் நோக்கினன். "பாவி, என் மனைவியுடன் என்ன அக்கிரமங்கள் புரிகிருய்?" என்று அவன் கூவினன்.

தனது காதலி விவாகமானவள் என்று காப்டன் கனவிலும் கருதவில்லை. அவளுக்கு மூளைத்த கணவனைக் கண்டு அவன் பிரமிப்பும் நடுக்கமும் அடைந்தான். என்ன சமாதானம் கூறுவது என்பது அவனுக்குத் தெரியவில்லை.

"அடே! அயோக்கியா! என் குடும்ப வாழ்க்கையை நீ கெடுத்து விட்டாயே! இவளுடன் இனி நான் எப்படி குடித்தனம் செய்வது? விவாக ரத்து மனு தாக்கல் செய்யாமல் நான் மறு வேலை பார்க்கப் போவதில்லை" என்று சீறினன் கணவன்.

தனது துர் நடத்தை அம்பலத்துக்கு வந்து விடும் என்று அஞ்சினன் காப்டன் பிராட்செத். ஆத்திரத்துடன் துடித்த கணவனின் கால்களில் விழுந்து தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

"எனது மன்னிப்பைப் பெறுவதற்கு ஒரு வழி தான் உண்டு" நீ காவல்கள் இருக்கும் அரணைப்பற்றிய விவரங்கள் எல்லாவற்றையும் எனக்குத் தெரிவிக்க வேண்டும்! என்ருன் கணவன்.

காப்டனுக்கு வேறு வழியில்லை. அக்கொடியோனது இஷ்டத்துக்கு இணங்காவிடில் தனக்கு அவமானமும் தலை குனிவும் சித்திக்கும் என்று அவன் அஞ்சினன். தனது நாட்டின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்ட அரணின் ரகசியங்களை அவன் வெளியிட வேண்டியதாயிற்று.

பாவம்! அந்த நிர்ப்பாக்கியனுக்கு ஜெர்மன் வேவு இலாகாவால் ஆடப்பட்ட நாடகம் அது என்பது எப்படி முன் கூட்டியே புலப்படக் கூடும்? தன்னை மயக்கிய பெண் ஒரு வேவுகாரி என்றும் அவளது கணவனை நடித்த மனிதன்ஒரு வேவுகாரன் என்றும் அறிவதற்கு அவனுக்கு தீர்க்க தர்சனம் ஏது? அவர்களால் தயாரிக்கப்பட்ட படுகுழியில் வீழ்ந்து விட்டான்.

சில மாதங்களுக்குப் பின் ஜெர்மன் சேனை செகோஸ்லோவாகியாவில் பிரவேசித்து அதை தன் வசப்படுத்திக் கொண்ட பொழுது காப்டன் பிராட்செத் தனது கைத்துப்பாக்கியால் தன்னை சுட்டுக் கொண்டான். தேசத்துரோகியான தனக்கு தானே தண்டனை விதித்துக்கொண்டு அதை நிறைவேற்றியும் விட்டான். வேறு அவனல் செய்யக்கூடியது என்ன இருக்கிறது?

நீதிக் கதை

விக்ரஹ ஆராதனை

★

ஏ. எஸ். பி. அய்யர்
ஐ. ஸி. எஸ்.

'நாம் விக்ரஹ ஆராதனையை ஒழித்து விட வேண்டும். ஐரோப்பியர்கள் நம்மை ஏளனம் செய்கிருர்கள்' என்று நாகரீகப் பற்றுடைய ஒருவன், வைதிகப் பற்றுடையவர்களிடம் சொன்னன்.

'அவர்கள் சிரித்தால் சிரிக்கட்டும். அவர்கள் எந்த வஸ்துக்களை கும்பிடுகிருர்கள் என்பது எனக்குத் தெரியாதா? துப்பாக்கிகளையும் விஷக்காற்றுகளையும், திரவியத்தையும், யந்திரங்களையும் அவர்கள் வழிபடுகின்றனர். அப்படியிருக்க நாம் நைவேத்தியம் செய்யும் பலகாரங்களையும் தின்பண்டங்களையும் சாப்பிடாத விக்ரஹங்களுக்கு ஆராதனை செய்வதில் என்ன பிழையிருக்கின்றது? விக்கிரஹ ஆராதனையின் மூலம் சில ஏழை மக்களுக்கு உணவு கிடைக்கின்றது, கல்லினலும், உலோகங்களினலும் செய்யப்பட்டிருக்கும் கள்ளங்கபடற்ற விக்ரஹங்களை வழிபடுவது எவ்வளவோ மேல். விருந்துகளினலும் தேநீராலும் சிற்றுண்டிகளினலும் சதா நமது வயிற்றை நிரப்பிக் கொண்டு திரிவதைக் காட்டிலும், விக்ரஹ ஆராதனை சிறந்ததென்பதில் சந்தேகமில்லை" என்று வயதான வைதிகப் பற்றுடைய கிழவர் ஒருவர் சொன்னர்.

'விக்ரஹத்திற்குப் பலி கொடுக்கும் கெட்ட வழக்கத்தையாவது நிறுத்த நாம் பாடுபடவேண்டும். சில ஜாதிகளைச் சேர்ந்தவர்கள் வாயில்லாத மிருகங்களை விக்கிரஹங்களுக்குப் பலியாகக் கொடுக்கின்றனர். அந்த வழக்கத்தையாவது ஒழிக்க வேண்டும்' என்ருன் சீர்திருத்தக்காரன்.

'அதைச் செய்யலாம். கடவுளின் பெயரைச் சொல்லி கொன்று, மிருகங்களின் மாமிஸத்தை நமது தேசத்தவர்கள் புசிக்கின்றனர். ஐரோப்பா தேசத்தவர்களோ, தங்கள் வயிற்றை நிரப்புவதற்காகவே பல மிருகங்களைக் கொன்று விடுகின்றனர். பாதிரிமார்கள் அத்தகைய மாம்ஸத்தின் முன்பு நின்றுகொண்டு அருட்பாக்கள் பாடுகின்றனர். நம்மவர்களோ மாம்ஸத்தின் முன்பு நின்றுகொண்டு மந்திரங்களை உச்சரிக்கின்றனர். இவ்வுலக சரித்திரத்தில் கோடிக்கணக்கான மனிதர்களை மாம்ஸ ஆகாரங்களை விட்டுவிடும்படிக்குச் செய்ததும் மதுபானத்தைஒழித்து விடும்படிச் செய்ததும், நமது தேசமாகிய இந்தியாவே என்று எழுதப்பட்டிருக்கிறது' என்று கிழவர் கூறினர்.

'மிருகங்களை வழிபடும் கெட்ட வழக்கத்தையாவது நாம் ஒழிக்க வேண்டும். மாடுகளையும், குரங்குகளையும், கழுகுகளையும் நாம் ஏன் தொழ வேண்டும்?' என்று சீர்திருத்தக்காரன் கேட்டான்.

'அந்த விஷயத்திலும் கூட நான் வேறு அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன். அது முற்றிலும் தவறு என்று சொல்வதற்கில்லை. மிருகங்களுக்குள் சிறந்த அத்தகைய மிருகங்களைத் தெய்வமெனக் கருதுவதனல், நமக்கு உண்மை விளங்குகிறது. கடவுள் தன்னைப் போலவே இருக்கிருர் என்று கருதும் மனிதனுடைய அகம்பாவம், ஒழிந்து போவதற்கு அது தான் சிறந்த மார்க்கம். கடவுள் எல்லா வஸ்துக்களிலுமிருக்கிருர். எல்லா உருவத்துடனும் இருக்கக்கூடிய அபார சக்தி அவருக்கிருக்கிறது என்னும் உண்மையை அறிய நமக்கு மேற்கூறிய மார்க்கம் உபயோகமாயிருக்கிறது. கடவுள் மனிதனைப் போன்ற ஸ்வரூபத்துடன் தான் விளங்குகிருர் என்று நிரூபித்துக்காட்ட முடியாது. கடவுளுக்கும், மனிதனுக்கும் மிருகங்களுக்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கிறது. மனிதசொரூபத்துடனிருப்பதாக எண்ணி கடவுளை வழிபடும் ஜனங்கள், மிருக சொரூபத்துடன் இருப்பதாக எண்ணி ஏன் கடவுளை வழிபடக் கூடாது? ஆதலால் மாடுகளையும், குரங்குகளையும் கழுகுகளையும் வழிபடுவதில் குற்றமிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை" என்று வைதிகப் பற்றுடையவர் சொன்னர்.

★

ராஜபக்தி

திருவனந்தபுரத்தைப் பார்க்கச் சென்ற ஒருவன் ஒரு கோவிலுக்குச் சென்ருன். ஒரு உத்தியோகஸ்தன் அவனுக்குக் கோவிலுள்ள பல அதிசயமான விஷயங்களைக் குறித்து எடுத்துச் சொன்னன். முன்னொரு காலத்தில், அந்த கோவில் அர்ச்சகன் திருவனந்தபுரத்து அரசனைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றியதாக அந்த உத்தியோகஸ்தன் எடுத்துரைத்தான். அரசனைக் கொல்ல எதிரிகள் அரசனைப் பின் தொடர்ந்தனர். அப்போது கோவில் அர்ச்சகன் தன் உடையை அரசனுக்குக் கொடுத்து, அரசனுடைய உடையைத்தான் அணிந்துகொண்டானென்றும், அரசன் தப்பியோடிப் பிழைத்தானென்றும், அர்ச்சகன் எதிரிகளால் கொல்லப்பட்டானென்றும் உத்தியோகஸ்தன் தெளிவாகச் சொன்னன். 'அந்தக் காலத்தில் ஜனங்கள் அதிக ராஜ பக்தியுடனிருந்து வந்தனர்' என்று கோவிலைச் சுற்றிக்காட்டிக் கொண்டே, அந்த உத்தியோகஸ்தன் கோவிலைப் பார்க்கச் சென்றவனிடம் சொன்னன்.

'அக்காலத்தில் ராஜபக்தி அதிகமாக இருந்ததென்ருல், விரோதத்தினல் சண்டை சச்சரவுகளும் அதிகமாகவே இருந்திருக்க வேண்டும். தனது உயிரையே தியாகம் செய்யக்கூடிய அர்ச்சகர்களை இப்போது காண்பது அரிது. அக்காலத்தில் இருந்த கலகக்காரர்களைப் போன்ற கலகக்காரர்களையும் இப்போது பார்ப்பதரிது' என்று கோவிலைப் பார்க்கச் சென்றவன் பதிலளித்தான்.

சபதம்

★

மஹாகவி டாகூர்
எழுதியது

"வங்காளிப் பெண்கள் தாங்களே தங்களுக்குகந்த கணவர்களைத் தேடி அடைகிறார்கள்" என்று கேள்விப்பட்டேன். நானும் அம்மாதிரியே தான் என் கலியாணத்தையும் முடித்துக்கொள்ள வேண்டும் என்று கடவுளின் தயவை நாடினேன்-பல வ்ரதங்களும், வேண்டுதல்களும் செய்துகொண்டிருந்தேன்.

எனக்குச் சரியாக எட்டு வயது நிரம்புவதற்குள்ளேயே என் கலியாணம் நடந்தேறியது. நான் என் மனதிற்குகந்த மணாளனை அடைந்தும், முன் ஜன்மத்தின் கர்மபயனால் அவரைச் சில காலம் கூடக் கண்குளிரப் பார்க்க முடியவில்லை. கடவுள் என் இரு கண்களின் ஒளியையும் வாங்கி விட்டார். வாழ்க்கையின் கடைசி நிமிஷம் வரை, அவரைத் திரும்பவும் ஒரு முறை கூட பார்க்கக் கொடுத்து வைக்கவில்லை.

சிறு வயதிலேயே எனக்கு அக்னிப் பரீக்ஷை ஆரம்பமாகியது. என் பதினைன்காவது வயது பூர்த்தியாவதற்குள் கர்ப்பத்திலேயே இறந்த குழந்தை ஒன்று பிறந்தது. யாருக்கு அம்மாதிரி துன்பங்களை அனுபவிக்க வேண்டுமென்றிருக்கிறதோ, அவர்கள் இறந்து விட்டால் பிறகு எப்படிக் கஷ்டங்களை அனுபவிக்க முடியும்? துக்கம் நிறைந்த வாழ்க்கையை வேறு யார் அனுபவிப்பது? எரிவதற்காக ஏற்பட்ட விளக்கிற்கு எண்ணெய் கிடைக்காமல் போவதில்லை. அது எவ்வளவு நேரம் எரிய வேண்டுமோ அது வரை எரிந்தே தீரும்!

நான் வியாதியின் காரணமாக மரணப் படுக்கையாகப் படுத்திருந்தேன். சில நாட்களில் அது குணமாகியது-மரணத்தின் வாயிலிருந்து தப்பித்துக்கொண்டேன். ஆனால் தேக அசதியாலும், மனதின் பலஹீனத்தாலும் என் கண்ணில் ஏதோ வியாதி கிளம்பியது.

அச்சமயம் என கணவர் டாக்டர் பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தார். புதிது புதிதாக வித்தைகளைக் கற்றுக்கொண்டதன் பயனாக எல்லா வியாதிகளுக்கும் சிகிச்சை செய்யும் திறமையை அடைந்தார். அவரே என் வியாதிக்குச் சிகிச்சை செய்யலானார்.

என் சகோதரனும் அப்பொழுது காலேஜில் பி. எல். பரீக்ஷைக்குப் படித்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் அவன் என் கணவரருகில் வந்து "நீங்கள் ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நீர் குஸுமின் கண்களை வீணாக்கி விடுவீர். வேறு நல்ல டாக்டரைக் கூப்பிட்டுக் காண்பியுங்கள்" என்றான்.

"வேறு டாக்டர் வந்து என்ன சிகிச்சை செய்யப்போகிறார்? இந்த வியாதிக்கு எந்தெந்த மருந்து இருக்கிறதோ அவைகள் எல்லாம் எனக்குத் தெரியும்" என்றார் என் கணவர்.

என் சகோதரன் சற்று படபடப்புடன், "அப்படியானால் உமக்கும், உமக்கு உபதேசிக்கும காலேஜ் உபாத்தியாயருக்கும் யாதொரு பேதமுமில்லை" என்றான்.

"நீர் சட்டப் பரீக்ஷை படிக்கிறீர், வைத்தியத்தைப் பற்றி உமக்கு என்ன தெரியும்? உமக்குக் கலியாணமான பிறகு உங்கள் மனைவியின் சம்பந்தப்பட்ட விவகாரம் ஏதாவது நடந்தால் அப்பொழுது என் ஆலோசனைப் படியாகவா நடப்பீர்?"

'எப்பொழுது ராஜாக்களுக்குள் யுத்தம் நடக்கிறதோ அப்பொழுது குடிஜனங்களுக்குத்தான் அதிக கஷ்டம்' என்று என் மனதினுள்ளேயே சொல்லிக் கொண்டேன். என் கணவருக்கும் என் சகோதரனுக்கும் மனவேற்றுமை ஏற்பட்டது. மேலும் இரு பக்கத்தின் க்ரோதமும் என் மேல்! என் சகோதரன் என்னை ஒருவருக்குச் சன்மானமாக அளித்து விட்டான். பிறகு என் சம்பந்தமாக ஏன் என் கணவருடன் சண்டை போடுகிறான்? என் சுக-துக்கம் கஷ்ட-நஷ்டம் எல்லாம் என் கணவரைச் சேர்ந்தன.

அன்று என் கண் சிகிச்சை சம்பந்தமாகவே தான் கணவருக்கும் என் சகோதரனுக்கும் மனவேற்றுமை ஏற்பட்டது. முதலிலிருந்தே வியாதியின் காரணமாக என் கண்களில் நீர் பெருகிக் கொண்டிருந்தது, மேலும் அன்று முதல் கண்ணின் வியாதி அதிகரித்தது. ஆனால் அதற்கு உண்மை பொருப்பாளி என் கணவரா அல்லது சகோதரனா என்பது எனக்குத் தெரியாது.

என் கணவர் கல்லூரிக்குச் சென்ற பிறகு ஒரு நாள் பிற்பகல் என் சகோதரன் டாக்டர் ஒருவரைக் கூட்டிக்கொண்டு என்னிடம வந்தான். அந்த டாக்டரும் என் கண்களை நன்றாகப் பரிசிலனை செய்து "இப்பொழுதே இதற்கு நன்றாக வைத்தியம செய்யாவிட்டால் பிறகு மிகவும் கஷ்டம்" என்று சொல்லி அவர் ஏதோ மருந்தை எழுதிக்கொடுத்துப் போய்விட்டார். என் சகோதரனும் மருந்து வாங்க வேலைக்காரனை அனுப்பினான்.

டாக்டர் சென்றபிறகு அண்ணனிடம் 'உன் காலில் விழுந்து நமஸ்கரிக்கிறேன். இப்பொழுது எனக்கு நடக்கும் வைத்யத்தில் நீ குறுக்கிடாதே" என்றேன் நான்.

என் அண்ணனிடம் நான் சிறு வயது முதலே மிகவும் பயந்து கொண்டிருந்தேன். அன்று அவனெதிரில் நான் அந்த இரண்டு வார்த்தை சொன்னது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. என் கணவருக்குத் தெரியாமல் அண்ணன் செய்யும் வைத்யத்தால் எனக்கு ஒன்றும் பிரயோஜனமில்லை என்று மட்டும் மனதில் பட்டது.

என் சொல்லைக் கேட்டு அண்ணன் கூடச் சிறிது ஆச்சரியமடைந்திருக்கலாம். சிறிது நேரம் மௌனமாக ஏதோ யோசித்து விட்டு "நல்லது, இனிமேல் நான் டாக்டரைக் கூட்டி வரமாட்டேன். ஆனால் மருந்து வந்ததும் அதை ஒரு முறை பரிசோதித்துப் பார்க்க வேண்டும்" என்றான்.

மருந்துவந்ததும் அதைஉபயோகிக்கும் விபரங்களை என்னிடம் சொலலிவிட்டு, அண்ணன் போய் விட்டான். என் கணவர் கல்லூரியிலிருந்து திரும்பிவருவதற்குள், அந்த மருந்து புட்டி, அதன் அதன் மற்ற சாமான்களையும் எடுத்து, வீட்டின் பின்புறம் எறிந்து விட்டேன்.

அண்ணனிடம் ஏற்பட்ட மனஸ்தாபத்தால் என் கணவர் மேலும் பலசிகிச்சைகளைச் செய்யலானார். காலை உபயோகித்த மருந்து மாலை யில்லை. இம்மாதிரி மாற்றிக்கொண்டே வந்தார்.

கண்களுக்கு மருந்திட்டுக் கட்டுக் கட்டினார். கண்ணாடி போட்டுக் கொள்ளச் சொல்லி கண்ணாடியும் வாங்கிக் கொடுத்தார். மேலும் கண்களுக்கு பல மருந்துகளையும் போட்டார். உள்ளுக்கும் பலமாக மருந்துகளைக் கொடுத்து வந்தார் அந்த துன்பங்களை எல்லாம் பல்லைக் கடித்துக் கொண்டு பொருத்திருந்தேன். சில சமயங்களில் இப்பொழுது கண் எப்படி இருக்கிறது என்று என் கணவர் கேட்பார் 'சற்று குணமாக இருக்கிறது. என்று சமாதானம் சொல்லி விடுவேன். என் மனதிலும நான் வியாதியிலிருந்து குணமடைந்து விட்டேன் என்றே நினைத்துக் கொண்டிருந்தேன். கண்களிலிருந்து ஜலப் பிரவாகம் அதிகமாக ஏற்படும் சமயம் அம்மாதிரி நீர் பெருகுவது நல்லது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். நீர் வருவது சட்டென்று நின்றதும் என் கண குணமாகி விட்டது என்று எண்ணினேன்.

ஆனால் சிலநாட்கள் வரை கண்ணின் உபாதை மாத்திரம் பொருக்கமுடியவில்லை. எல்லாப் பொருள்களும் தெளிவில்லாமல் தென்பட்டன, என் விதியின் காரணமாக, மனமே குழப்பமடைந்திருந்தது. கணவர் கூட என் கவலையாகவே தான் இருக்கிறார் என்றும் அறிந்து கொண்டேன். இவ்வளவு நாட்களுக்குப் பிறகு எந்த டாக்டரைக் கூப்பிட்டுக் காண்பிப்பது?' என்று அவர் யோசித்துக் கொண்டிருந்தார்.

"அண்ணனுடைய மனதைச் சரிப்படுத்தவாகிலும் நீங்கள் யாராவது ஒரு டாக்டரிடம் காண்பியுங்கள். அதனால் ஒன்றும் குடி முழுகிப்போய் விடாது! அவனும் இதே காரணத்தால் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறான். அது எனக்கு மிகவும் கஷ்டமாகத் தோன்றுகிறது சிகிச்சையை நீங்களே செய்யுங்கள் வெளியோர் பார்ப்பதற்காக டாக்டர் ஒருவரை அருகில் வைத்துக்கொள்ளுங்கள்" என்றேன் நான்.

"நீ சொல்வதும் நல்லது தான்" என்று சொல்லி அன்றே ஒரு வெள்ளைக்கார டாக்டரை அழைத்துக்கொண்டு வந்தார். அவர்கள் இருவருக்கும் என்ன பேச்சுவார்த்தை நடந்ததோ அது எனக்குத்தெரியாது. ஆனால் அந்த டாக்டர் என் கணவருக்குச் சில விதிகளைக் காண்பித்துவிட்டு மௌனமாகஇருந்து விட்டார் என்பது மட்டும் எனக்குத் தெரியும்.

டாக்டர் போனபிறகு என் கணவருடைய கையைப் பிடித்துக்கொண்டு மெல்லிய குரலில் "எங்கிருந்து இந்த வெள்ளைக்கார டாக்டரைப்பிடித்துக கொண்டுவந்தீர்கள்! வேறு யாராவது நாட்டு வைத்தியனைக் கூப்பிட்டுக்கொண்டுவரக் கூடாதா? இங்கிலீஷ் வைத்தியத்தில் இவருக்கு உங்களைவிட என்ன தெரிந்திருக்கப்போகிறது?" என்று கேட்டேன் நான்.

என் கணவர் சற்று படபடப்புடன் "உன் கண்ணை ஆப்ரேஷன் செய்ய வேண்டுமென்று அவர் சொல்லுகிறார்" என்றார்.

நான் கோபமாக "இந்த விஷயம் உங்களுககு முதலிலேயே தெரியுமல்லவா? அதை ஏன் என்னிடம் இவ்வளவு நாட்கள் வரை மறைத்துக்கொண்டிருந்தீர்? என்னிடம் அதைச்சொன்னால் நான் பயந்து விடுவேன் என்று எண்ணினீர்?" என்றேன்.

அவர் மனதிலிருந்த வெட்கம் தூர விலக்கியது. சற்று சிரித்த வண்ணம் "நீயே சொல். ஆப்ரேஷன் என்றால் ஆண்பிள்ளைகளே பயப்படுகிறார்கள் ஏன் றால் உன்னிடம்......?" என்றார்.

நானும் சிரித்துக்கொண்டே "ஆண்களுடைய வீரமெல்லாம் பெண்களின் எதிரில் தான்" என்றேன்.

கணவர் சட்டென்று கம்பீர பாவத்துடன் "அது உண்மை தான ஆண்கள் கேவலம் கர்வம் பிடித்தவர்கள்" என்றார்.

நானும் கம்பீரமாய் "அந்தக் கர்வத்திலும் நீங்கள் பெண்களை உங்களுக்குச் சமமாக ஒப்பிடலாமா? அந்த விஷயத்தில் எங்கள் இனத்தவர்தான் வெற்றியடைந்தனர்" என்றேன்.

அச்சமயம் என் அண்ணனும் வந்தான். அவனைத் தனியாகக் கூட்டிக கொண்டு போய் "நீ கூட்டி வந்த டாக்டருடைய மருந்தால் தான் நான் இவ்வளவு நாள் தள்ளிக் கொண்டு வருகிறேன். மேலும் கண கூடச் சற்று குணமடைந்து வருகிறது. ஆனால் ஒரு நாள் உள்ளுக்குச் சாப்பிடும் மருந்தை கண்ணில் விட்டுக் கொணடு விட்டேன். அதனால் கண மிகவும் கெட்டு விட்டது-என் உயிரே போய் விடும்போலிருக்கிறது! எல்லோரும் கண்ணை ஆப்ரேஷன் செய்ய வேணடுமென்று சொல்லுகிறார்கள்" என்றேன்.

"நான் இவ்வளவு நாட்களாக உன் கணவன்தான் வைத்தியம செய்து வருகிறான் என்று நினைத்துக்கொணடிருந்தேன். அந்தக் கோபத்தினால் தான், நான் அன்று போனவன் இங்கே வரவில்லை." என்றான் என் சகோதரன்.

"அவர் மருந்தைத் திருட்டுத் தனமாக நான் உபயோகிக்காமலிருநதேன்—அவர் மனம் உடைந்து விடாதா?"

பெண்ணாகப் பிறந்தால் சமயத்தில் பெரிய பொய்யையும் சொல்ல நேரிடுகிறது. சகோதரனுடைய மனமும சஞ்சலமடையக கூடாது: கணவருடைய செய்கையையும் கணடிக்க முடியாது. தாயாகிக் குழந்தையைச் சீராட்ட வேண்டும்: கணவனிடம் பணிவுடன் நடகக வேண்டும். பெணணாகப் பிறந்தால் எவ்வளவு பெரிய கஷ்டத்தையும் பொருத்துக்கொண்டிருக்கும் சகிப்புத் தன்மை வேண்டும்.

அந்தச் சகிப்புத் தன்மையின் பயன் நான் குருடியாவதற்கு

முன் என் கணவரும் சகோதரனும் ஒன்றாகச்சேர்ந்திருந்ததைப் பார்த்ததுதான்! திருட்டுத்தனமாகச சிகிச்சை செய்து வந்ததால்தான் வியாதி முற்றிவிட்டது என்று அண்ணன் நினைத்துக் கொண்டிருந்தான். முதலிலிருந்து என் அண்ணனைத் தள்ளி வைககாமல் வைத்தியம் செய்து வந்தால் நான் குணமடைந்திருப்பேன் என்று என் கணவர் எணணிககொணடிருந்தார். அம்மாதிரி இருவரும் நினைத்துக கொண்டு ஒருவரை "ஒருவர் மன்னிப்பு கோரத் தயாரானார்கள். என் கணவர் அணணனின் யோசனையைக கேட்கச் சித்தமானார். அணணனும் கணவர் இஷ்டப்படி நடககச் சம்மதித்தான்.

இருவருமாக ஐரோப்பிய டாக்டர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக கூப்பிட்டுக் கொண்டு வந்தார்கள். என் இடது கண்ணில் ஆபரேஷன் நடந்தது. அதனால் அதில் இருந்த சிறு ஒளியும் மங்கி விட்டது. அதேபோல் வலது கண்ணும் சிறிது சிறிதாக மங்கலாயிற்று. சிறு வயதில் மாங்கல்ய தினத்தன்று ஸ்வர்ண பிம்பம் ஒன்று என் கண் முன் முதன் முதலாகத் தென்பட்டது. அதன்பிறகு அதை எப்பொழுதும் பார்கக முடியாமல் கண்களில் திரையிடப்பட்டது.

2

ஒரு நாள் கணவர் என் படுக்கையருகில் வந்து மெதுவான குரலில் "இனி நான் என் எதிரில் உன் பெருமையைக் காண்பிக்க மாட்டேன். உண்மையில் உன் கண்களை நான்தான் பாழ்படுத்தினேன்!" என்று சொல்லிக்கொண்டிருக்கும் பொழுதே அவர் குரல் தடைபட்டது.

நான் என் இரண்டு கைகளாலும் அவருடைய வலது கையைப் பிடித்துக்கொண்டு "போகட்டும நீங்கள் செய்ததும் நல்லதுதான். அது உங்களுடைய பொருள் நீங்களே வாங்கிக்கொண்டீர்கள். என் கண் வேறு டாக்டர் கையினால் கெட்டுப்போயிருந்தால் நல்லதாயிருக்கும் என்று நீர் நினைக்கலாம். ஆனால் எப்படி நடக்கவேண்டும் என்று எழுதியிருக்கிறதோ அப்படியேதான் நடக்கும். என் கண்ணை யாராலும் காப்பாற்ற முடியாது. இந்தக் கண்கள் உங்கள் கையால் போய் விட்டன. உங்கள் கையால் குருடியானதைப் பற்றி நான் மிகவும் கர்வமடைகிறேன். ஸ்ரீராமச்சந்திர பிரபு தன் இஷ்ட தேவதைக்குப் பூஜை செய்யும் சமயம் "இரண்டு புஷ்பம் குறைந்ததற்காகத் தன் இரண்டு கமல நேத்திரங்களையும் பிடுங்கித் தேவதையின் பாதத்தில் சமர்ப்பித்து விட்டார். நானும் என் தெய்வத்திற்குத் திருஷ்டியை தானம் செய்து விட்டேன். நீங்கள் உங்கள் கண்களால் பார்க்கும் நல்லவைகளை என்னிடம் சொல்ல வேண்டும். அதைத் தங்கள் கண்களால் பார்த்த அருள் பிரசாதம் என்று நினைத்து ஆனந்தமடைகிறேன்" என்றேன்,

நான் என் கணவரிடம் அவ்வளவு அதிகமாகப் பேசுவதே கிடையாது. மேலும் அவர் எதிரில் அம்மாதிரி பேசவும் கூடாது. நான் அந்த விஷயங்களையெல்லாம் பல நாட்களாக யோசித்து முடிவு செய்திருந்தேன். நடு நடுவே களைப்பு ஏற்படும் சமயங்களில் நான் அம்மாதிரி எண்ணுவது வழக்கம். அந்த சாந்தத்திலும், பக்தியிலும துக்கம் மேலிட்டு என்னையும் மீறி வெளிககுக் கிளம்ப யத்தனித்தது. அன்று என் மனதைப் பலவிதமாக மாற்றிக்கொண்டு மௌன வ்ரதம் பூண்டு ஒருவிதமாக அவருக்குப் பதில சொன்னேன் என்று நினைக்கிறேன்.

"குஸும், நான் என் மடத்தனத்தால் உன் வாழ்க்கையில் முக்கியமான பொருளை நஷ்டப் படுத்தி விட்டேன்- அதை இப்பொழுது எந்த விதமாகவும் என்னால் உனக்குத் திருப்பி அளிக்க முடியாது. ஆனால் என்னால் முடிந்த வரை உன் கண்ணை நன்றாகச் செய்ய முயற்சித்துக் கொண்டுதானிருப்பேன்" என்றார் என் கணவர்.

"இல்லை இது நல்லதல்ல. நீர் உங்கள் இல்லற வாழ்க்கையை குருடாக்கி வைக்க எண்ணுகிறீர்: ஆனால் நான் அம்மாதிரி இருக்க உங்களை விடமாட்டேன். நீங்கள் இப்பொழுது வேறு கலியாணம் செய்து கொள்ள வேண்டும்."

கலியாணம் செய்து கொள்ளுவது எவ்வளவு முக்கியமானது என்று அவருக்கு விவரித்துச் சொல்வதற்குள் என குரல் தடைபட்டது. சிறிது என் மனதைத் திடப்படுத்திக் கொண்டு மேலும் சிலவற்றைச் சொல்ல விரும்பினேன். அதற்குள் என் கணவர் படபடப்புடன "நான் மூடன், கர்வி ஆனால் வெளி வேஷக்காரனல்ல! நான் என் கையினாலேயே உன் கண்களை கெடுத்தேன். அதன் பாபத்திற்காக என் வாழ்க்கையைத் தியாகம் செய்கிறேன். நான் வேறு பெண்ணின் மேல் இச்சை கொண்டால், என்குலதெய்வம் கோபிநாதர் ஆணையாகச் சொல்லுகிறேன், பிரும்மஹத்தி செய்த பாபத்திற்கும் மாதா பிதாக்களைக் கொன்ற பாபத்திற்கும் ஆளாவேன்" என்றார்.

அவர் அப்படி முன்பின் யோசியாது சபதம் செய்வார் என்று எனக்குத் தெரிந்திருந்தால் அவரை அப்படிச் செய்ய இடம் கொடுத்திருக்க மாட்டேன்-கட்டாயம் அதைத் தடுத்திருப்பேன். ஆனால் அச்சமயம் கண்ணீரால் என் தொண்டை அடைபட்டிருந்தது. நான் அதை பலவந்தமாக அடககிக் கொண்டு அவர் சபதத்தைத் தடை செய்ய யத்தனித்தேன்—முடியவில்லை! அவர் சொன்னவற்றைக் கேட்டு ஆனந்தமாகத் தலையணியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு என் கடமையைச் செய்யத் தவறியதை நினைத்து வருத்தப் பட்டேன். நான் கண்ணை இழந்தவள் என்று தான் நினைத்திருந்தேன். ஆனால் அப்படியிருந்தும் இந்தத் துன்பங்களெல்லாம் என்னை விட்டபாடில்லை. வருத்தமடைந்தவன் எப்படித் தன் துககத்தை மனதினுள்ளேயே வைத்திருக்கிறானே அம்மாதிரி அச்செய்கையும் என் மனதிலேயே சுழன்று கொண்டிருநதது, நான் அவ்வளவு பெரிய பெருமையை விரும்பவில்லை. ஆனால் மனம் மாத்திரம் சுயநலமாக இருக்கிறது.

பலமாக மனதை அடக்கிய தன் பேரில் கண்ணீர் பெருகுவது சற்று தடைபெற்றது. அப்பொழுது அவர் முகத்தை என் முகத்தருகில் அணைத்துக் கொண்டு "நீர் ஏன் இந்த மாதிரி பயங்கரமான சபதத்தைச் செய்து கொண்டீர்? நான் உங்கள் சுகத்திற்காகவா கலியாணம் செய்துகொள்ளச் சொன்னேன்? நான் குருடியாகவிருப்பதால் எந்த வேலையைத் தங்களுக்கு என்னால் செய்ய முடியாதோ அதை அவளால் செய்து முடிப்பேன!" என்றேன.

"வேலையை வேலைக்காரி செய்வாள். ஆனால் நான் சுகத்தை எண்ணி வேலைக்காரியைக் கலியாணம செய்துகொள்வதா? திரும்பவும் நான எந்த விதமாக என் 'தேவி'யின் ஆசனத்தில் அவளை உட்காரவைப்பது என்று சொல்லி அவர் என் முகத்தை மேலே தூக்கி அன்புடன் முத்தம் தந்தார்.

அந்த ஸ்பர்சத்தினால் என் மற்றொரு கண்ணும் திறந்தது. நான் என் மனதினுள்ளேயே, 'போகட்டும். இது தான் சரி. நான் குருடியாகி விட்ட பிறகு வீட்டு எஜமானிபோல் உட்கார்ந்திருக்க முடியாது. இப்பொழுது வாழ்க்கையின் முன்னே பெரிய மனைவியாகி என் கணவருடைய நன்மையை நாடுவேன். இனி நான் பொய்பித்த லாட்டம் முதலியவைகளைக் கையாளமாட்டேன். குடும்பப் பெண்களுக்கு ஏற்படும் கபடம் அற்பபுத்தி முதலிய குணங்களை என் மனதிலிருந்தே தூரத்தள்ளி விடுவேன்' என்று நினைத்தேன்.

அன்று என் மனதுக்கும் எனக்கும் பல மணிநேரம் பெருத்த யுத்தம் நடந்துகொண்டிருந்தது. அவ்வளவு பெரிய சபதமிட்ட பிறகு என் கணவர், எந்த வகையிலும் வேறு கலியாணம் செயது கொள்ளமாட்டார் என்று எண்ணிய பொழுது என் மனதில் ஆனந்தத்தில் பொங்கியவற்றை என்னால் அடக்கவே முடியவில்லை. அதே சமயம் என் அறையில் யாரோ ஒரு தேவமாது வருவதுபோல் தோன்றிற்று. அவள் என் அருகில் வந்து 'இந்தச் சபதத்திலிருந்து வழுவும் நாளும் வரும். அச்சமயம் நீ அவருக்குக் கலியாணம் செய்துவைத்து சபதத்தை நீயே உதரித்தள்ள வேண்டும்' என்று சொன்னாள்,

அச்சமயமும் என் மனம் முன் போல கயநலமாகவே இருந்தது. "அவரே மறு விவாகம் செய்து கொள்ளமாட்டேன் என்று சபதம் செய்துகொணடு விட்டாரே!" என்றது அந்த ஆவல்.

'செய்து கொள்ளமாட்டாரா! ஆனால் அந்தச் சபதத்தினால் உனக்கு ஒன்றும் அனுகூலமில்லை' என்றது என் பிரகிருதி

'எனக்கு எல்லாம் தெரியும்; ஆனால் அவர் சபதம் செய்து கொண்ட பிறகு—அவ்வளவு தானே" என்று என் பிரகிருதிக்கும் ஆவலுக்கும் அதே போல தர்க்கம் நடந்துகொண்டிருந்தது. தேவி என்னைப் பயங்கர பாவத்துடன் மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தது, உலகமே என் வரை சருமேகத்தினால் இருள் மயமாகி விட்டது போலிருநதது.

அந்நாள் தொடங்கி எனக்கு வேண்டிய சௌகரியங்களையெல்லாம் அவரே செய்துகொண்டிருந்தார். முதலில் சிறு வேலைகளுக்கெல்லாம் கூட அவர் கூட இருப்பது நன்றாகவே இருந்தது. அதே காரணத்தால் அவர் எப்பொழுதும் என் அருகிலேயே இருக்கத் தலைப்பட்டார். நான் அவரைக் கண்களால் பார்க்க முடியாததன் காரணத்தால் அருகிலேயே இருப்பதை மிகவும் விரும்பினேன். கணவரின் முகத்தின் ஒளி என் மனக் கண்களின் பிரகாசத்தை விட அதிகமானது. அதை இந்திரியங்கள் தங்கள் தங்கள் வசமாக இழுத்துப் பங்கு போட்டுககொண்டன. இப்பொழுது என் கணவர் வெளியில் சென்றவர் திரும்பி வரச் சிறிது தாமதமாகிவிட்டாலும் என் மனம் உலகத்தையே சூன்யமாக நினைத்து விடுகிறது. எதையும் என்னால் விவரித்துச் சொல்ல முடியவில்லை ஏன் வாழ்க்கையே நாசமாகி விட்டது போல் தோன்றுகிறது: முன்பெல்லாம் அவர் காலேஜிக்குப் போய் திரும்பி வர நேரமாகி விட்டால் வாசற்பக்கமுள்ள தோட்டத்தில் உட்கார்ந்து அவர் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருப்பேன். அவர் எந்த இடததில் விளையாடுவாரோ, உலாத்துவாரோ அந்த இடங்களையெல்லாம் நான பதிய வைத்திருந்தேன். ஆனால் இன்று கண்ணையிழந்த என் சரீரம் அவரைத் தேடி அலைகிறது. அவருடைய அன்பில் என் அன்பைப் பிணைக்கும் வலையைக் கிழித்தெறிந்து விட்டது. இன்று அவருக்கும் எனக்குமிடையே ஒரு குருட்டுத்தனம் இருந்துகொண்டே வருகிறது. வேறு உபாய மற்றவளாக்கி உட்கார வைத்திருக்கிறது. அவர் எப்பொழுது என் அருகில் வருவார் என்று ஏங்கிக்கொண்டிருப்பேன், அதனால் அவர் சிறிது நேரம் என்னைப் பிரிய நேர்ந்தாலும் என் குருட்டுத் தேகம் அவரைப் பிடிக்க எண்ணுகிறது. மேலும் 'ஹா, ஹா,' என்று அவரைக் கூப்பிடுகிறது.

ஆனால் அவ்வளவு ஆசையிருப்பதும் நல்லதில்லை. கணவருக்கு மனைவியின் சுமை அதிக பளுவானது. அதன் மேல் இந்தக் குருடைச் சுமத்த நான் விரும்பவேயில்லை. இந்த அந்த காரமான சுமையை ஏன்மீதே சுமத்திக் கொண்டிருப்பேன். என் குருட்டுத்தனத்துடன் கணவரைப்பிணைக்க இடம் கொடுக்க மாட்டேன்.

சிறிது நாட்களுக்கெல்லாம், சப்தம், வாசனை முதலியவைகளை அறிவதில் மிகவும் தேர்ச்சி அடைந்தேன், முன்னைவிட அதிகமாக என் வீட்டுவேலைகளைச் செய்யலானேன். கண் தெரிந்தபொழுது எப்படி வேலைகளைக் கவனித்து வந்தேனோ அதையும் விட அதிகமாகச்செய்வதாக எண்ணினேன். கண் நன்றாகத தெரியும்பொழுது காது தன் வேலையைச் சிறிது மந்தப்படுத்திக் கொள்ளுகிறது. அதனால் எவவளவு அறிய முடியுமோ அதையும் விடக் குறைந்து விடுகிறது. தரித்திரம் பிடித்த கண்கள் ஒழிந்த பிறகு மற்ற அவயங்கள் எல்லாம் நன்றாகவே தங்கள் தங்கள் வேலையைச் செய்து கொணடிருந்தன.

இப்பொழுது என் வேலைகளை கணவரால் செய்வதற்கு நான் விடுவதில்லை. நானே செய்து கொள்ளுகிறேன். அவருக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளையெல்லாம் முன்போலச் செய்துகொண்டிருந்தேன்.

"நீ என் பிராயச்சித்தத்தில் கூட குறுக்கிடுகிறாய்" என்றார் என் கணவர்.

"பிராயச்சித்தம் எதற்காக? ஏன்? அப்படியானால் என் பாபத்தின்சுமையை உங்கள் மீது சுமத்துவதா?" என்றேன் நான்.

அவர் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும், ஆனால் அவரை நான் என் பந்தத்திலிருந்து விடுதலை அளித்து விட்டேன். அப்பொழுது அவரும் தன் மீதிருந்த பெரிய சுமை தன்னை விட்டிறங்கியது என்று எண்ணினார். வாழ்க்கை பூராவும் தன் குருட்டு மனைவிக்குப் பணிவிடை செய்வது ஆண்களுக்கு அழகல்ல!

என் கணவர் டாக்டர் பரீக்ஷையில் பாஸாகி விட்டார். அவர் என்னைக் கூட்டிக்கொண்டு முபஸிலம் போனார்.

அந்தக் கிராமத்தை அடைந்ததும், மனதில் நான் என் தாயின் மடியில் இருப்பதுபோல் தோன்றிற்று. எனது எட்டாவது வயதில் கிராமத்தை விட்டு நகரத்திற்குப் போனேன். அங்கிருந்து பத்து வருஷத்தில் எனது ஜன்மபூமியின் சாயை கூட மனதிலிருந்து மறைந்து விட்டது. கண்கள் இருந்தபொழுது கல்கத்தா நகரத்தில் உள்ள அதிசயங்களைக் கண்டு அனுபவித்துக் கொண்டிருந்தேன். கண்கள் போன பிறகு கல்கத்தா கண்காட்சிக்காகத்தான் இருக்கிறது என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் கண்கள் மங்கின பிறகும் கிராமத்தில் மாலை மங்கியவுடன் வெளிக்கிளம்பும் நக்ஷத்திரங்களின் ஒளி என் கண்முன் தோன்றுவது போல் இருக்கும்.

மார்கழி மாதக் கடைசியில் நாங்கள் ஹாஜிபூர் சென்றோம். புது இடம். அந்தப்பற்றி என் மனதில் ஒன்றும் தோன்றவில்லை. ஆனால் திரும்பவும் என் பாலியத்தில் இருந்தது போல் காது மூக்கு முதலிய அவயவங்களில் இருள் சூழ்ந்து கொண்டது. பனியால் நனைந்த பயிர்களின் சாலைகாற்றும், பச்சைப் பசேல் என்றிருக்கும் வயல்காடும், மண் வாசனையும், இடையர்களின் பாட்டும், சீர்கெட்ட வழிகளில் செல்லும் வண்டிமாடுகளின் சலங்கை சப்தமும்—எல்லாம் என் நினைவுக்கு வந்தன. வாழ்க்கையின் ஆரம்பத்தில் அந்தச் சப்தங்கள் என்னைச் சூழ்ந்து கொண்டிருந்தன. என் குருட்டுக் கண்ணினால் இப்பொழுது அவைகளைப் பார்த்துப் பிரதிவாதம் செய்ய முடியவில்லை.

நான் திரும்பவும் அந்தப் பாலியத்திலேயே சென்று விட்டேன். கேவலம் என் தாயாரையே நான் கண்டுகொள்ள முடியவில்லை. மனக்கண்ணினால் பார்க்கும் சமயம். என் பெரிய சகோதரி தலைவிரி கோலமாக வீட்டின் வெளிப்புறத்தில் வெய்யிலில் உட்கார்ந்து ஏதோ செய்துகொண்டிருக்கிறாள். ஆனால் அவளுடைய குயிலைப்பழிக்கும் தேவகானம் இப்பொழுது கேட்பதில்லை!

மழைகாலத்து மேகத்துடன் குளிர்ந்த காற்றும் ஒன்றுகூடி ஆகாயத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. ஆனால் பயிர் அறுவடையாகும் சமயம். சின்னஞ்சிறுவர்கள் கூடி ஆடிப்பாடி வேலையைச் செய்வோமே, அவர்கள் எல்லோரும் இப்பொழுது எங்கே போய்விட்டார்கள்? மாலை நேரம் அருகில் எங்கோ மாடுகள் வீட்டுக்குத் திரும்பும் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. அச்சமயம் தாயார் கையில் விளக்குடன் மாட்டுக்காரனுக்கு பட்டிக்கு வழிகாண்பிக்க வெளியே போவது போல் தோன்றிற்று. வித்யாலங்கார மஹாசயர் மண்டபத்தில் உள்ள கடிகாரம் மணிஅடிப்பது போல் சப்தம் கேட்டது. எட்டு வருஷங்களுக்குப் பிறகு இன்று என் பாலிய விஷயங்களில் உள்ள சத்தைக் கிரகித்துக் கொண்டு சக்கையை என்னிடம் கொடுத்தது போல் தென்பட்டது.

நான் சிறியவளாக இருந்த சமயம் வ்ரதம் அனுஷ்டித்துக் கொண்டிருந்தேன். அதிகாலையில் எழுந்து ஸ்நானம் செய்து பூப்பறித்து வந்து சிவபூஜையும் செய்து வந்தேன். அவையும் நினைவிற்கு வந்தன. கல்கத்தா வந்த பிறகு பேச்சுநடை உடை பாவனையெல்லாம் வேறுவிதமாக மாறிவிட்டன என்பது உண்மை ஆசார விவகாரங்களை அங்கு சரியாக அனுஷ்டிக்க முடியவில்லை. அங்கு ஒரு நாள் நடந்த சம்பவம் என் நினைவிற்கு வருகிறது: கண் ஒளியை இழந்த அன்று என்தோழி அருகில்வந்து 'பார்குலஷ், நீ வெறுப்படையக்கூடாது. உன்னுடைய இடத்தில் நான் இருப்பேனேயானால் கணவருடைய முகத்தை ஏற எடுத்துப் பார்க்க மாட்டேன்'' என்றாள்.

"இப்பொழுது முகத்தைப் பார்ப்பதுதான் முடியாத காரியமாகிவிட்டதே! அதனால்தான் இந்தக் கண்களின் மேல் கோபம் வருகிறது, ஆனால் கணவர்மேல் ஏன் கோபமடைய வேண்டும்? என் கணவர் சரியான சமயத்தில் டாக்டரைக் கூட்டிட்டுக் காண்பிக்கவில்லை. அதனால ஒருவேளை அவர் மேல் எனக்கு வெறுப்பு ஏற்படலாம். மேலும் அவர் பேச்சின்மீது இப்பொழுது வெறுப்பு ஏற்படுகிறது வாழ்க்கையில் ஈடுபட்ட பிறகு இஷ்டத்துடனே அல்லது இஷ்டமில்லாமலோ சுகதுக்கங்களை சகித்துக் கொண்டுதான் இருக்கவேண்டும். ஆனால் உள்ளன்புடன் இருப்போமாகில் துன்பத்திலும் ஒரு இன்பம் கட்டாயம் கிடைக்காமல் போகாது இல்லாவிட்டால் வீண் சண்டையும் பூசலும் தான்! நான் குருடியாகிவிட்டதை நினைத்தால் மிகவும் வருத்தமாயிருக்கிறது. என் கணவருக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் கஷ்டத்திற்கு இன்னும் வருத்தத்தை உண்டுபண்ணுவதா?'' என்றேன் நான்.

அதிகப் பிரசங்கமான வார்த்தைகளைக்கேட்டதும் என்தோழி பேசாமல் வெறுப்புடன் எழுந்து போய்விட்டாள். எது வேண்டுமானாலும் ஆகட்டும் வாதத்தில் ஒரு விஷயம் மாத்திரம் புகுந்து கொண்டு தானிருக்கிறது. அம்மாதிரி சம்பாஷணைகள் வியர்த்தமாவதில்லை. அவளுடைய வார்த்தையில் கோபப்படும்படியாகச் சில வார்த்தைகள் வெளிவந்ததினால் என் மனதிலும் சில விஷயங்களும் உற்பத்தியாயின. அப்படி வாதாடுபவர்களை நான் பூஜைகூடச் செய்யலாம் என்று எண்ணினேன். ஆனால் அவர்களுடைய பேச்சினால் மனதில் ஒரு புண் மாத்திரம் ஏற்பட்டு விடுகிறது.

(தொடரும்)



திருச்சி டாக்டர் ஓ. ஆர். பாலு அவர்களின் புத்ரி சௌ. கமலாவிற்கும், மதுரை ஸ்ரீ வெங்கடாசலம் அய்யர் குமாரர் ஸ்ரீ சுந்தரேசனுக்கும் திருச்சியில் 5-6-42ல் விவாஹம் நடைபெற்றது.



காலையில் எழுந்தவுடன்

காலையில் எழுந்தவுடன் நீங்கள் செய்ய வேண்டிய முதல் காரியம் டீ அருந்துவதே. இரவிலுண்டான அசக்தியை முற்றிலும் போக்கி, சுரு சுருப்புடன் உங்கள் பகல் வேலைகளைக் கவனிக்க தயார் செய்ய வல்ல உயரிய பானம் டீயே ★

எங்கள் புதிய பிரசுரமாகிய "டீ அருந்துவதற்கான சமயங்கள்" என்ற சித்திரங்களுடன் கூடிய புத்தகத்தில், டீ அருந்துவதற்கான சில விசேஷ சமயங்களைப்பற்றி இங்கிலீஷில் சொல்லப் பட்டிருக்கிறது. இந்த விளம்பரத்தைக் கத்தரித்து, உங்கள் பெயர் விலாசத்துடன், கீழ்கண்ட விலாசத்தாருக்கு அனுப்பினால், அவர் இப்புத்தகத்தின் பிரதி ஒன்று இலவசமாக அனுப்புவார்: கமிஷனர் (இந்தியாவுக்கு), இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால் பெட்டி நெ. 2172, கல்கத்தா.



இந்தியன் டீ

அருந்துங்கள்

புத்துயிரளிக்கும் உயரிய பானம்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

IK 156

ஜம்மியின் "லிவர்க்யூர்"

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளுக்கு

கீழ்க்கண்ட இடங்களில் ஆலோசனை பெறலாம்:—

48, பெரிய தெரு, கும்பகோணம்.

1/1, பிராடீஸ் ரோட், மைலாப்பூர் - மதராஸ்.

17, தேரடிக் கடைத்தெரு, தெப்பக்குளம் திருச்சினாப்பள்ளி.

கடிதங்கள் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதப்படவேண்டும்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ், கும்பகோணம்.

சித்திரமும் சிருங்காரமும்

ஒரு உறுதி

பட் அப்பட்டும் லூ காஸ்டெல்லோவும் ஒரு உறுதி எடுத்துக் கொண்டிருக்கின்றனர். இனிமேல் பிராணிகள் வரும்படங்களில் தாங்கள் நடிப்பதில்லை என்று அவர்கள் தீர்மானித்திருக்கின்றனராம். "ரியோ ரீடா" என்ற மெட்ரோ படத்தில் போலீஸார் உபயோகத்திற்காக பழக்கப்பட்ட ஒரு நாய் காஸ்டெல்லோவின் ட்ரௌஸரைப் பிடித்து கடித்து இழுக்கவேண்டிய சந்தர்ப்பம் ஒன்று வந்தது. அச்சமயம் அந்த நாய் அவரது சதையையும் கடித்திழுத்துவிட்டது.

"இது போதும் பிராணிகளுக்கு நம்மிடம் ப்ரீதி இல்லை" என்று கூறி விட்டார் காஸ்டெல்லோ இதற்கப்புறம் முன்பு சில படங்களில் குதிரை சவாரி செய்யும் காலத்தில் இவர்கள் பலவிதமான அவஸ்தைகளுக்குட்பட்டதுண்டாம்.

"கரடியைப்போல் மோசமானது கிடையாது. பட், நான், மற்றும் அதைப் பழக்கி வைத்தவர்—நாங்கள் மூவரும் அது இருந்த கூண்டிற்குள் நுழைந்தோம். அதனால் பயமில்லை என்றார் அதைப் பழக்கியவர். உள்ளே புகுந்ததும் கரடி என்னைத் தழுவிக்கொண்டது. உருமஆரம்பித்தது. அப்போது எனக்கேற்பட்ட பயத்திற்கு எல்லையே கிடையாது. நான் பழக்கியவரைத் திரும்பிப் பார்த்தேன். அவரும் படடும் அவசரம் அவசரமாக வெளியே ஓடிக்கொண்டிருந்தனர். நானும்உடனே ஓடினேன். அதற்கப்புறம் உள்ளே போக மறுத்து விட்டேன்'' என்கிறார் காஸ்டெல்லோ.

* * * *

நார்மா ஷியரர்

நார்மா ஷியரரின் உண்மையான ஸ்வபாவம் எத்தகையது என்பதை அறிந்தவர் வெகு சிலர்தான். இதற்குக் காரணம் அவர் பலதரப்பட்ட அம்சங்கள் பொருந்தியவர். பெரிய நடிகை என்றே அவரைப் போற்றுபவர்களுக்கு அவர் இதர விஷயங்களிலும் அதிக கவனம் காட்டுகிறார் என்பதையறிய வியப்பாயிருக்கும்.

ஸ்டூடியோவில் பலரிடையே இருந்து வேலை செய்வதில் நார்மா ஷியரருக்கு இருக்கும் ஆசை அளவற்றது: அங்கு தமது நண்பர்களுடன் கூடிப் பொழுது போக்குவதில் அதிக விருப்பம் கொண்டவர். அது அவருக்கு சொந்த வீட்டிற்கடுத்த ஸ்தானத்தில் இருக்கிறது. படப்பிடிப்பு நின்றிருக்கும் சமயத்தில் தமக்கு மிகவும் பிடித்தமான மஞ்சள்-சாக்கலெட் வர்ணமமைந்த ஆடையை அணிந்திருப்பது அவருக்கு மிகுந்த திருப்தியைத் தருகிறதாம்: கிராமபோன் ரிகார்டுகளின் பாட்டைக் கேட்பது: தம்க்கு அதி சிநேகமானவர்களிடம் போன் மூலம் பேசுவது: இவைதான் அவர் அப்போது செய்யும் அலுவல்கள். அவர் தமது தினசரி வாழ்க்கையை நன்கு சீர்படுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார். தாய் என்ற முறையிலும், நடிகை என்ற விதத்திலும், தொழில் நடத்துபவர் என்ற தோரணையிலும் அவர் தமது காரியத்தைக்கவனித்து வருவது பிறர் வியக்கத்தக்கதாகும். ஒரு விஷயத்தில் ஊக்கத்துடன் ஊன்றியிருக்கும் ஸ்வபாவத்தில் அவருக்கிடையானவர் வேறு ஒருவரும் கிடையாது. ஒரு புதிய பாஷையையோ ஒரு புதிய நடன முறையையோ கற்றுக் கொள்வதில் அவரைப் போன்ற திறமைசாலிகள் இருக்க முடியாது.



பிரபல டாக்டரின் சிலை.

காலஞ் சென்ற பிரபல டாக்டரான எஸ். ரங்காச்சாரியாரின் உருவச்சிலை ஒன்று அடையாறில் இருக்கும் ஸ்ரீ கே. ராஜகோபால் என்பவரால் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

தாம் மேலோங்கியிருக்க வேண்டும் என்ற ஆசை ஒருபுறமிருக்க, தீர்க்கதர்சனமும் அவரிடம் குடிகொண்டிருக்கிறது. பலதரப்பட்ட படங்களில் நடித்து நடிப்புக் கலை அவர் அதிகமாக சோபையுறச் செய்திருக்கிறார். எங்கு பார்த்தாலும் கஷ்டமும் துக்கமும் தலைவிரித்தாடும் இந்நாளில் படங்களில் நடிப்பதுதான் மனதிற்கு ஆறுதல் அளிக்கின்றது என்பது அவரது நம்பிக்கை.

தவிரவும் சம்பாஷணையிலும் நார்மா நிகரற்றவர். அவருடன் பேசுபவருக்கு அவர் ஒரு பெரிய ஆசிரியராக விளங்கியிருக்க வேண்டும் என்ற எண்ணம் உதிக்கும். பிறர் சொல்வதைப் பொறுமையுடன் கேட்கும் குண விசேஷமும் இவரிடம் அதிகம் குடிகொண்டிருக்கிறது. இந்த விசேஷத்தை சாதாரணமாகப் பிறரிடம் காணமுடியாது. தாம் பதில் அதிகம் கொடாதபோதிலும், எதிராளியைக் கேட்கும் கேள்விகளோ ஜாஸ்தி. நடிகர்களுள் அவரைபபோல் பேட்டியிடத் தகுதியானவர் கிடையாது. ஒருவர் அவருடன் 15 நிமிஷ நேரம் பேசி விட்டுத் திரும்பி விடலாம் என்ற எண்ணத்துடன் போனார்: போனவர் மூன்று மணிகளுக்குப் பின்னர் தான் வெளியே வந்தார். அவ்வளவு நாழிகை பேச்சு அதி ஸ்வாரஸ்யமாக நடந்தது.

"நீங்கள் இந்த தொழிலை விட்டு விட மாட்டீர்கள் என நம்புகிறேன். தொழிலைத் துறந்து என் தொழிலை நீங்கள் மேற்கொண்டால் நீங்கள் என்னைவிட அதிகச் சிறப்புடன் நடந்து கொள்வீர்கள்'' என்றார் அவர் நார்மாவிடம் அச்சமயம்.

நார்மா அணியும் ஆடைகள் மிகவும் நாசூக்கானவை: பார்ப்பவர் போற்றும்படியானவை. அவரைப்போல் நன்றாக உடுப்பவர் வேறு ஒருவரும் கிடையாது. துணி விஷயத்தில் அவருக்கிருக்கும் சிரத்தை அபாரமானது: அதைத் தைப்பதிலும் அவர் காட்டும் கவனம் ஆச்சரியமானது. எவ்வளவு நாழிகையானாலும் இருந்து, தமக்கான உடை தமக்கு மிகவும் பொருத்தமாயிருக்கிறதா என்பதைக் கவனித்து முடிவு செய்யும் பொறுமை அவருக்குத்தான் உண்டு. இதற்குள் சுற்றியிருப்பவர்களுக்கெல்லாம் அலுப்பு ஏற்பட்டு விடும்.

ஒரு தேநீர்க் கச்சேரியை நார்மா ஷிரர் நடத்தி வைத்தால் அதைப்போல் திருப்திகரமானது வேறு ஒன்றும் இருக்காதாம். விருந்துக்கு அழைக்கப்பட்டவர் ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி உண்டாகும் வகையில் அவர் ஏற்பாடு பண்ணுவாராம்

* * * *

நாகரீகத்தின் அடையாளம்

உராத்திலாமூர் என்ற பிரபல நடிகை அணிந்திருக்கும் இப்புதுமாதிரி உடை நாகரீகத்தின் போக்கை சூசிப்பிக்கிறது.

அட்டைப் படம்

வீரா ஜரீனா என்ற பிரபல பாரமவுண்ட் நடிகை.

அமெரிக்காவில் யுத்த தளவாட உற்பத்தி

"1944-ம் வருஷத்தில் அமெரிக்காவில் யுத்த தளவாட உற்பத்தி இப்போதிருப்பதை விட இரண்டு பங்குக்கு அதிகமாகி விடும். இன்று நாம் சுற்றி வந்து கண்ட விசேஷத்தை ஹிட்லரும் கோயரிங்கும் கண்ணால் பார்தது விட்டால் அவர்கள் ஆயுதங்களை எறிந்துவிட்டுத் தலையை மோதிக்கொள்ள வேண்டியதுதான்''

என்று அமெரிக்க யுத்த தளவாட உற்பத்தி இலாகத் தலைவர் மிஸ்டர் டோனல்ட் நெல்ஸன் சொன்னார். அவர் டெட்ராய்ட் பிரதேசத்தில் உள்ள யுத்த தளவாடத் தொழிற்சாலைகளை சுற்றி பார்த்துவந்தார். அவருடன் ப்ரிட்டிஷ் யுத்த தளவாட உற்பத்தி இலாக மந்திரி மிஸ்டர் ஆலிவர் லிட்டில்டனும் மிஸ்டர் எ. ஹரிமனும் சென்றார்கள்.

* * * *

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

எந்தனுசு ஸைரிந்துனு-ஸீதாகாந்து தயராது

அனுபல்லவி

(முனி) சிந்தனிய்ய! ஸ்ரீ ராமசந்த்ர!
நா செந்தரானிங்க மனஸுராதா

சரணம்

1. ஸமர்ஹிதா ஸமான! நேதாஸுட
ஸமானபாலன! நாமொரலு வேஸமாயென
ஸுஜனுவன! ஸுடக-
ரமாப்த பரிவார மரவினுத!
ரமாரமண! யிதரமா நீகு நே

2. கராஜமுக! வ்ருஷப ராஜ பனுத!-இ
பராஜ வரத! ஸதா பக்த சுலப! ராஜன்ய! சு-
பத! ஸதத மௌனி ராஜனுத! யவனி
ராஜ பரிசர! நிராதங்க! நிராமய! நே

3. விராஜ வாஹன! விராஜ மான க-
விராஜ ரக்ஷக! நாத பமுலன்னி விராஜ ஸமுலேனஜ்ஞான-
மொஸகராதா ஜனக! நக ராஜ தர!
த்யாகராஜனுத! நாகராஜ சயன!

II

முனி சிந்தனிய்ய!	—முனிவர்களால் தியானிக்க படுபவனே!
ஸ்ரீ ராம சந்த்ர!	—ஸ்ரீ ராமா!
நா செந்தரானு	—என் சமீபம் வந்து ரக்ஷித்தருள
இங்க மனஸுராதா	—இன்னும் உனக்கு மனம் வராதா
ஸீதாகாந்து தயராது	—ஸீதாதேவியின் நாயகனுன ஸ்ரீராமா உனது கிருபை கிடைக்கப் பெறுமல்
எந்தனுசு ஸைரிந்துனு	—நான் எவ்வளவென்று பொறுப்பேன்
ஸமரஹிதா ஸமான	—ஸமானமற்றவனே! இணையற்றவனே!
நேதாஸுட	—நான் உன் அடிமை
ஸமானபாலன!	—அனைத்துயிர்களையும் சமமாய் பாவித்து ரக்ஷிப்பவனே!
நாமொரலு	—என் பிரார்த்தனைகள்
வேஸமாயென?	—வீணுகப் போயினவா?
ஸுஜன அவன!	—ஸாதுக்களை ரக்ஷிப்பவனே!
ஸுபகரமா!	—சௌக்யத்தைக் கொடுப்பவனே!
ஆப்த பரிவார!	—மித்திரர்களாயும் பக்தர்களுயும் விளங்கிய வானராதி வீரர்களை பரிவாரங்களாகக் கொண்டவனே!
அமரவினுத!	—தேவர்களால் துதிக்கப்பட்டவனே!
ரமாரமண	—லக்ஷ்மீ நாயகனே!
நே நீகு யிதரமா?	—நான் உனக்கு அன்னியனுகப் போய் விட்டேனு?
கராஜமுக	—ஆகாயத்தில் விளங்கும் பூர்ண சந்திரன் போன்ற அழகிய முகத்தை யுடையவனே!
வ்ருஷப ராஜ பனுத!	—ரிஷபாரூடனுன பரமசிவனுல் துதிக்கப்பட்டவனே!
இபராஜ வரத!	—கஜேந்திரனை ரக்ஷித்தருளியவனே!
ஸதா பக்த சுலப!	—எபபோதும் பக்தர்களுக்கு சுலபமானவனே!
ராஜன் ய!	—அரசனே!
சுப த!	—ஸௌக்கியத்தைக் கொடுப்பவனே!
ஸதத	—எப்பொழுதும்
மௌனி ராஜனுத!	—முனி ச்ரேஷ்டர்களால் துதிக்கப்பட்டனே!
அவனி ராஜ பரிசர!	—பூமண்டலத்தைப் பரிபாலித்து வந்த ராஜாதி ராஜர்களால் போற்றப்பட்டவனே!
நிராதங்க!	—கவலையற்றவனே!
நிராமய!	—பரம்பொருளே!
நே எந்தனுசு ஸைரிந்துனு	—நான் எவ்வளவென்று பொறுப்பேன்.
விராஜவாஹன	—பக்ஷி ராஜனுன கருடனை வாஹனமாகக் கொண்டவனே!
விராஜமான	—மேன்மை கொண்டு விளங்கும்
கவி ராஜ ரக்ஷக!	—கவிச்ரேஷ்டரான வால் மீகி முனிவரை ரக்ஷித்தருளியவனே!
நாதபமுலன்னி	—என் பூஜைகளெல்லாம்
விராஜஸமுலேன	—பயனற்றதாக செய்யாமல்
ஞான மொஸகராதா	—எனக்கு ஞான ஒளி கொடுத்து ரக்ஷித்தருளக் கூடாதா
ஜனக!	—உலகனைத்தையும் ரக்ஷித்தருளும் தந்தையே!
நக ராஜ தர	—கோவர்த்தன கிரியைக் குடையாய்ப் பிடித்தவனே!
த்யாகராஜநுத!	—த்யாக ராஜனுல் துதிக்கப்பட்டவனே!
நாகராஜசயன!	—ஆதி சேஷன் மேல் பள்ளி கொண்டவனே!
எந்தனுசு ஸைரிந்துனு	—நான் உன் பிரிவை எவ்வளவென்று பொறுப்பேன்.

III

ஸ்வாமிகள் தன் பூஜா மூர்த்திகளான ஸ்ரீராம பஞ்சாயதன விக்ரகங்களைக் காணுமல் தேடி வருந்திய பொழுது பாடிய கீர்த்தனங்களில் இதுவு மொன்று. இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் பகவானுடைய பிரிவைத் தாளாது வருந்தி தனக்கு தரிசனமளித் தருளுமாறு வேண்டிக் கொள்கிருர்.

எந்தனுசு:—"ஏ டாபமு ஜேஸிதிரா" என்ற கீர்த்தனத்தில் 3-வது சரணத்திலும், "இந்த தாமஸ மைதே" என்ற கீர்த்தனத்திலும் ஸ்வாமிகள் இது போன்றே பகவானிடம் முறையிட்டுப் பிரார்த்திப்பது கவனிக்கத் தக்கது.

சிந்தனேய:—"லோகாவன சதுரா" என்ற கீர்த்தனத்தின் 2-வது சரணத்திலும் இது போன்றே கூறியுள்ளார்.

நாமோரலுவேசமாயன:—"சரணு சரணனுசு" என்ற கீர்த்தனத்தில் உள்ள அபிப்பிராயமே இங்கும் காண்கிறது.

நே இதரமா நீகு:— "நீ வாட நே கான" என்ற கீர்த்தனத்திலும் இதே போன்ற கேள்வியைக் கேட்டுள்ளார்.

VI

ராகம் யதுகுல காம்போதி — ஆதி தாளம்

(28-வது மேள ஜன்யம். ஆ. ஸரிமபதஸ-அவ. ஸம்பூர்ணம்.)

பல்லவி

; ஸரி மா மா	மகமா ; மக	மாபா பாபா	; பம பாத ;
எந் . . த	னு . சு ஸை .	ரிந் . துனு	ஸீ . தா ;
தப மபதஸ் தப	தபமக மககரி	ரிஸரீ ரிபமக	மகரீ ஸா ;
. . காந் . . து .	த . ய . ரா . . .	. . . து . .	. . .

அனுபல்லவி

; மகா பதா	ஸ்ா ஸ்ா ஸ்ா ;	; நிஸ்ா நிதா	தாநித பாமப
சிந் தனீ	. ய ஸ்ரீ	ரா . ம	சந் . . . த்ர . மு .
தப மகா பதா	ஸ்ா ஸ்ா ஸ்ா ;	; தநிஸ்ாரிஸ் நிஸ்ாநிதா	தா நிதபா பாமப
னி . சிந் தனீ	. ய ஸ்ரீ	ரா . . . . ம	சந்த் . . ர நா .
தப பமமா மக .	மபபா மப மபதா	; மம பாதஸ் தப	தபமக கரி ரிகமக
. . செந்த ரா .	. . னிங்க . . .	ம . ன . . ஸு .	ரா . . தா . . .
ரிகாஸ			
. . . (எந்தனுசு)			

சரணம்

ஸாபம பமகா	கரிகா மாகா	கா கா ; கா	மப மக மா கா
வி ரா . . ஜ	வா . . ஹ ன	வி ரா ஜ	மா . . . ன க
ரீ ரீ ; ரீ	ஸாமா தபபம	காமக கரிரீ	ரீமக ரிஸஸா
வி ரா ஜ	ர . . . க்ஷ .	க நா . . . த	பமு . லன்னி
பதா ; ஸா	ஸாரீ ரிபமா	மகஸா ரீ மா	பாதஸ பா ;
வி . ரா ஜ	ஸமு லே . .	ன . ஞா . .	ன மொ . ஸ
மபாத ஸ்ஸ்ஸ்ஸ்	நிஸ்நித தநிதப	பம மாம கமபத	ஸ்தபம கரி ரிகமக
கராத ஜனகந	கரா . ஜதரத்யா .	க . ராஜ நுதநா .	கரா . ஜ யன .
ரிகாஸ			
. . (எந்தனுத்ஸு)			

ஹாலிவுட்டில்

நடிகர் விலாஸம்

ஹாலிவுட்டில் எல்லா நடிகர் நடிகைகளுடைய விலாஸங்களும் எழுதி வைக்கப் பட்டிருக்கின்றன: ஆரம்பம் முதல் தற்சமயம்வரை அவர்களது விலாஸங்கள் குறிப்பிடப் பட்டு வைக்கபபட்டிருக்கின்றன, 1920-ம் வருஷம் முதற் கொண்டு இந்த விலாஸ புத்தகம் மிகவும் ஜாக்ரதையாகத் தயாரிக்கப்பட்டு வருகிறதாம்; மெட்ரோ—கோல்ட்வின் மேயர் கம்பெனியார் தயாரித்து வைத்திருக்கும் விலாஸத்தொகுதி தான் உலகத்திலேயே மிகச் சிறந்தது.

* * * *

ஒரு சமயம், சமீபத்தில் ராபர்ட்டேலர் ஒரு வழக்கு விஷயமாகத் தமது பழைய விலாஸம் ஒன்றைக் கண்டு பிடிக்க வேண்டியிருந்தது. இது விஷயமாக மெட்ரோ—கோல்ட்வின் மேயர் கம்பெனியார் தயாரித்து வைத்திருந்த விலாஸப்புத்தகம் அவருக்கு மிகவும் உதவியது. இப்போது அப்புத்தகத்தில் அவரது பெயரை எடுத்துக்கொண்டு பார்த்தால் அவர் இது வரை வஸித்து வந்த எட்டு இடங்களின் அட்ரஸ்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன. பிந்திய ஒவ்வொரு அட்ரஸ்ஸையும் நாம் கவனிக்கும் போது அவர் கொஞ்சம்கொஞ்சமாகப் பிரசித்தி பெற்று வந்ததைக் காணலாம்: முதன் முதல் டேலர் ஒரே ஒரு அறையைத் தான் வாடகைக்கு அமர்த்திக் கொண்டிருந்தார்; அப்போது பாங்கியில் ஊழியம் புரிந்து வந்த நண்பர் ஒருவரும் டேலருடன் தங்கி வந்தார்.

* * * *

க்ளார்க் கேபிளின் பெயருக்குக் கீழ் ஆறு விலாஸங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. முதல் முதலில் அவர் ஒரு "துக்கடா நடிக"ராக வந்தார் என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

* * * *

இப்புத்தகத்தை இன்றும் மிகவும் ஜாக்ரதையுடன் தயாரித்து வருபவர், ராய் பென்னிங். லான் சானி மேரி ட்ரஸ்லர், ஜின் ஹார்லோ முதலிய பிரபலஸ்தர்களது விலாசங்களும் இதில் காணப்படுகின்றன.

* * * *

ஆனுல் இதில் ஒரே ஒருவர் விலாசம் தான் பாக்கி. மற்றவர் யாவருடையதும் இதில் காணப் படுகிறதாயினும், க்ரேடா கார்போவின் விலாஸம் தான் இதில் இடம் பெறவில்லை.

* * * *

சென்றவார நிகழ்ச்சிகள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

டனர். கோட்டைக்குள்ளிருக்கும் தெருக்களில் தற்போது கடுமையான கைகலந்த போராட்டம் நடைபெறுகிறது.

அருகிலுள்ள கியாங்ஸீ மாகாணத்திலுள்ள பூசௌ என்ற நகரையும் ஜப்பானியர் வசப் படுத்திக் கொண்டனர்.

* * * *

பெல்ஜியத்திற்கருகில் கடல்போர்

இம்மாதம் 7-ந் தேதி காலை நமது கடற்படை ரோந்துக் கப்பல்கள் பெல்ஜியக் கரைக்கு எதிரில் அதிக சக்திவாய்த ஜெர்மன் கடற்படைக் கப்பல்களைச் சந்தித்தன். நாஸி கப்பல்கூட்டத்தில் 2 நூதனமான ஜெர்மன் டார்பிடோப் படகுகளேனுமிருந்தன. இவை 600 டன் எடையுள்ளவை. ஒரு சிறிய போர் நடந்தது. அதில் ஜெர்மன் டார்பிடோப் படகு ஒன்றின் மத்திய பாகத்தில் பிரிட்டிஷ் டார்பிடோ குண்டு பாய்ந்தது. இது மூழ்கிப்போயிருக்குமென்பது அநேகமாக நிச்சயம். பலமாக எதிர்க்கப் பட்டபோதிலும் நமது கப்பல்கள் எல்லாம் தமது ஸ்தானத்திற்குத் திரும்பி வந்தன. நமது கப்பல்களுள் ஒன்று சேதப்பட்டது. 2 மாலுமிகள் இறந்தனர்.

* * * *

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

காலமானார்



சென்னைசிந்தாதிரிப்பேட்டை சுதேசி டைப் பௌண்டரி உரிமையாளரும், நூதனரகமான தமிழ் எழுத்துக்களை உற்பத்திசெய்து தமிழ் அச்சுத் தொழிலுக்குப் பெரும் சேவை செய்தவருமான ஸ்ரீ டி. ஆறுமுக முதலியார் 6—6—42 மாலை 3-மணிக்கு மைலாப்பூரில் தமது இல்லத்தில் காலமானார். இவர் மரணத்தால் அச்சுத் தொழிலுக்குப் பெரும் நஷ்டம் ஏற்பட்டதைக் குறித்து வருந்துகிறோம்.

	ரூ.	அ.
கருணையம்	1	0
சாந்தகுமாரி	1	0
மாய ப்ரபஞ்சம்	1	0
சந்திரமண்டலம்	1	0
புத்தியே புதையல்	0	14
கதம்பமாலை	0	12
பட்டமோ பட்டம்	0	10
மகிழ்ச்சி உதயம்	0	10
ஆனந்தஸாகர்	0	8
வீரவஸந்தா	0	8
நளினசேகரன்	0	8
மூன்று வைரங்கள்	0	8
வத்ஸகுமார்	0	8
படகோட்டி	0	8
மாலதி	0	8
ப்ரேமப்ரபா	0	8
சுடர் விளக்கு	0	6
பக்ஷமாலிகா	0	6
மாதவமணி	0	4
ஸரஸராஜன்	0	4

சுதேசமித்திரன்
புத்தகசாலை, சென்னை.

ஸ்ரீ த்யாகராஜராஜ!	—த்யாகராஜன் என்று பெயர் கொண்ட எனக்கு ரக்ஷகனுன அரசனே!
ராகவா!	—ஸ்ரீராமா!
நனுப்ரோவுமு	—என்னை ரக்ஷித்தருள்வாய்

III

இந்தக் கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் ஸ்ரீராமனுடைய மகிமைகளைச் சொல்லித் துதித்து தான் அவனை பஜிப்பதையே விரதமாகக் கொண்டுள்ளதையும் குறிப்பிட்டு தன்னை ரக்ஷித்தருளப் பிரார்த்திக்கிருர்.

நீ பத சிந்தனமே:—ஸ்ரீபதி நீபத என்ற கீர்த்தனத்திலும் ஸ்வாமிகள் இதுபோன்றே பகவானிடம் முறையிட்டுப் பிரார்த்திப்பது கவனிக்கத்தக்கது.

மார ஸனமுன:—

ரகுவர தவமூர்த்தி: மாமகே மானஸாப் ஜே
நரககதி ஹரம் தே நாமதேயம் முகேமே |
அநிச மதுல பக்தயா மஸ்தகம் த்வத் பதாப்ஜே
பவஜலதி மக்னம் ரக்ஷமாம் ஆர்த்த பந்தோ|| என்ற ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளது போன்றே ஸ்வாமிகளும் தெரிவித்துள்ளார்.

வாரி வாரி:—பகவத்கீதை 9 அத்-22 வது ச்லோகத்தில், அநந்யா; சிந்தயந்தோமாம் யேஜனு: பர்யுபர்ஸதே | தேஷாம் நித்யாபியுக்தானும் யோகக்ஷேமம் வஹாம்யஹம்|| என்று சொல்லி பக்தர்களின் பக்திக்குக் கட்டுப்பட்டு அவர்களுக்குரிய க்ஷேம லாபங்களை அளித்தருளும் பகவான் தனக்கருள் புரிய மனமில்லாது வாளாவிருக்கும் காரணத்தால் இவ்விதம் தெரிவித்துள்ளாரோ என்று கொள்ளலாம்.

ஸம்பரஜீவாரி:—கிருஷ்ணவதாரத்தில், சிவபெருமானல் எரித்து சாம்பலாக்கப் பட்ட மன்மதன், பிரத்யுமனன் என்ற பெயருடன் பகவானுக்குப் புத்திரனுக ஜனித்து மாயாவதி என்வளை மணநது ஸகல சாஸ்த்திரங்கள் மாயா வித்தைகள் எல்லாவற்றிலும் தேர்ச்சி பெற்றவனுக் விளங்கி துஷ்டர்களான சம்பராசுரன் முதலானவர்களைப் போரில் வென்றது, முதலான சம்பவங்களை ஸ்ரீமத் பாகவத தசமஸ்கந்தம் 55 வது ஸர்க்கத்தில் விரிவாகக் காணலாகும் இவ்விஷயத்தையே ஸ்வாமிகள் இப்பதத்தால் இங்கு ஞாபக மூட்டுகிருர்.

தினராஜ ராஜ:—'ஜகதானந்தகாரகா' என்ற கீர்த்தனத்தின் மூன்ருவதுசரணத்தில் சந்திர ஸூர்ய நயன அப்ரமேய' என்று சொல்லி பகவானைத் துதித்திருப்பது காணத் தக்கது.

IV

ராகம் தேவகாந்தாரி ஆதி தாளம்

(29-வது மேள ஜன்யம்—ஆ. ஸரிமபதஸ்—அவ. ஸ்நிதபமகரிஸ.)

(குறிப்பு:—'மபதா, நிஸ்ரீ என்ற ஆரோகணக்ரமமும் உண்டு: பாத நீதபா, பதநித டிபதப என்ற ஸஞ்சாரங்களில் கைசிகி நிஷாதம் ஒலிக்கும்.)

பல்லவி

1.	; தநீத பாபம பா பம கமாக ரீகரி ரிஸஸா	; நிஸ்ரிஸ நித ஸரீ	கமாக ரீ, ரி ஸரி
	ஸ்ரீ . . . ர . கு வ . ர . . . க . ரு . .	ணு . . . . . கர	நீ . . . ப த .
2.	மப தநீத பாபமபா ; பதநித மபதப மகரிக ரிஸஸா	; நிஸரிஸ நித ஸரீ	கமாக ரீ, ரி ஸரி
	. . ஸ்ரீ . . . ர . கு வ . . . ர . . . . க . ரு . .	ணு . . . . . கர	நீ . . . . பத .
3.	மப. தநீத பாமம பா ; மபதநி ஸ்நிதாபா தபமகரி	ஸா ஸநிரிஸ நித ஸரீ	கமாக ரீ, ரிஸரி
	. . ஸ்ரீ . . . ர . கு வ . . . ர . . . க . ரு . .	. ணு . . . . . கர	நீ . . . . பத .
1.	; பம கமாக ரீ ததபா மபதரி	; ஸ்நிதா தநீத பா	பம கமாக ரீ ஸரி
	சிந் . . . . த ன . . மே . .	ஜீ . . . . . . வ	ன . . . . மு .
2.	மப பம கமாக ரீ ததபா மபதநி	ஸ்ரி த்ம்ாக்ரீ ஸ்நிதா	தநீத பா பமகமாகரி
	. . சிந் . . . . த ன . . மே . . .	. . ஜீ . . . வ . .	ன . . . மு . . . . .
	ஸரிமப		
	. . . . . (ஸ்ரீரகுவர)		

அனுபல்லவி

1.	; பா, தபுமகரீ மபதா, ரி ரிஸ்ஸா	; ஸ்ா, ஸ் ஸ்ா	நிஸ்ாநி தா, த தநீத
	வா ர . . ண . . ர . . க்ஷ க . .	பக் . த ஜ	ணு . . . . க நி . .
2.	பா தபமகரி மபதா மபதா, ரீரிஸ்ஸா	; ஸ்ா, ஸ் ஸ்ா	நிஸ்ரிக் ரிஸ்நித தத தநீத
	. வா . . . . ர . ண ர . . க்ஷக . .	பக் த . ஜ	ணு . . . . கநி.
	பா தா, ஸ்ரி க்ம்க்ரி ரீ, கரிஸ்ஸா	; ஸ்நிதா ரீ,க் ரிஸ்ஸா	ஸ்நிதா பா, மகரி
	. வா ரண் ஸன் . . ம்ரு . து .	பா . . ஷ . ண .	ஸத் . . கு ண . .
	மப		
	. . (ஸ்ரீரகுவர)		

சரணம்

பாப பாப மப தப மக ரிரி ஸஸ	ஸநிதா ஸரி ஸரிம	ரிமபம பா ரிம
மார மார நுத நா . மன வினி வினு	மா . . ரமா ரமண	மரவகு ரா ஸகு
பமப தா நிஸ்நி ஸ்ரி க்ம்ாக் ரிஸ்ஸ்	தாதரி ஸ்ரிஸ்நி தத தநீத	ப்ப பமபத பமமக ரிஸ
மா . ர மா ரஸன முன நீ . . நாமமு	மா . . ரு . மா . . ரு பல் . .	கனு த . ய . சே . . . யு . .
ஸரிமப		
மு . . . (ஸ்ரீரகுவர)		

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினர்.)

மிஸ்ஸ் ச. கோ. இ.
காதர்மீரா சாயபு,
ஹைட் நர்ஸரி தோட்டம், சேலம் S.
ஒட்டு மாங்கன்களும், பழச்செடிகளும், இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகளுமிருக்கின்றன. கேட்லாக் இனும்.

உண்மை உறுதிக்கும் உத்திர வாதம்.

—:—

"ஷண்முகம் பிராண்டு" ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்
தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர்,
P. 3094. 341, எஸ்பிளனேட், மதராஸ்.

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound anyone or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)

சிறுவர் கதை

★

"அவனன்றி அணுவும் அசையாது"

★

கோபாலய்யர்

ஒரு காலத்தில், தேவர்கள் அசுரர்களால் துன்புறுத்தப்பட்டனர். தேவர்கள் திருமாலின் மாயையால், தாங்கள் மட்டும் அமிர்தபானம் செய்து அசுரர்களை முறியடித்தனர். தத்தம் இடத்திற்குத் திரும்பலாயினர். திரும்புங்கால், அவர்களுக்குள் ஒரு பெரிய சச்சரவு ஏற்பட்டது. இந்திரன் தன்னுல்தான் வெற்றி கிடைத்தது என்ருன். வாயு, அக்னி, வருணன், யமன், முதலானேர் தங்கள் தங்கள் வலிமையால் தான் அசுரர் தோற்றனர் என்று வாதித்தனர்; பிரம்மா தன்னுல் தான் என்ருர்; விஷ்ணுவோ தன் மாயையால் தான் என்ருர். சச்சரவு முற்றி ஒவ்வொருவரும் கை கலக்கும் தருவாயிலிருந்தனர்.

அத் தருணம் ஒரு யக்ஷன் அவர்களிடை தோன்றினுன். ஒரு சிறு மண் குவியல் குவித்தான். அருகில் கிடந்த ஒரு சிறு வைக்கோல் துரும்பை அதில் நாட்டினுன். இவன் செய்கையை தேவர்கள் அதிசயித்துப் பார்த்து நின்றனர். யக்ஷன், "தேவர்களே! நீங்கள் ஒவ்வொருவரும், தன்னுல் தான் வெற்றி, இல்லாவிடில் தோல்வி தான் அடைந்திருப்போம் என்று சொல்லுகிறீர். யார் இந்தச் சிறு துரும்பை கீழே சாய்க்கின்ருரோ அவரால்தான் வெற்றி யடைந்ததாகக் கொள்ளுங்கள்" என்று சொல்லி மறைந்தான். தேவர்கள் யாவரும் இதை சுலபமான காரியமென்று எண்ணினர்.

துரும்பை அசைக்க வாயுதேவன் முன் வந்தான்: மெதுவாக வீசினுன்: அசையக்காணேம். கொஞ்சம் கொஞ்சமாக வேகத்தை அதிகப்படுத்தி முழு வேகத்துடன் வீசினுன். அண்டம் கலங்கியது. எல்லா ஜீவன்களும் செயலழிந்து உணர்விழந்தன. தேவர்களே கலங்கினர். வாயு தேவனும் ஓய்ந்து உட்கார்ந்துவிட்டான். ஆனல் மண் குவியலும் துரும்பும் அப்படியே இருந்தன.

அக்னி பகவான் தன் பலம் முழுவதையும் உபயோகித்துப் பார்த்தான். தேவர்களும், அண்டங்களும் கலங்கினவே தவிர துரும்பை ஒன்று செய்ய முடியவில்லை. இந்திரன், மமதையுடன், தன் முழு சக்தியுடன், தன் வஜ்ராயுதத்தால் தாக்கினுன். மலைகளை பொடியாக்கிய அவ்வாயுதம் தூள் தூளாயிற்று. துரும்பைப் பின்னப்படுத்த முடியவில்லை.

பிறகு வருணன் என்ன, யமன் என்ன, இன்னும் அநேக தேவர்களாலும் அத்துரும்பை நகர்த்தவும் முடியவில்லை. பிரம்மா, தன் பிரம்மாஸ்திரத்தை பிரயோகித்தார். யாது பயன்? அத் துரும்பினிடம் அணுகவும் முடியவில்லை. இதையெல்லாம் வாஸவன் பார்த்தார். ஒரு கணம் தானும் ஏன் தன் சக்ராயுதத்தைப் பிரயோகிக்கூடாதென்று நினைத்தார். ஒரு வேளை சக்கரம் இரண்டாகித் தோல்வியுற்ருல் தலைகுனிய நேரிடுமே என்று வாளாயிருந்து விட்டார்.

அத்தருணம் ஒரு பேரொலி கேட்டது. ஆகாசத்தில் ஒலி வந்த திக்கை நோக்கினர். ஒரு தேஜோமயமான தேவதா, சக்தி தோன்றியது. தேவர்கள் பயபக்தியுடன், "தாங்கள் யார்?" என்று கேட்டனர். அவர்கள் கேட்டு வாய் மூடு முன் அத்திவ்ய காட்சி மறைந்தது. மறுகணம் யக்ஷன் இவர்கள் முன் தோன்றினுன். இந்திரனுக்கு யக்ஷனை யார் என்று அறிய ஆவல் மேலிட்டது. உடனே யக்ஷனை, "தாங்கள் யார்?" என்று கேட்டான். யக்ஷன் தாமதமின்றி, "நீ யாவன்?" என்று கேட்டான். இந்திரன், "நான் தேவர்க்கதிபதி, இந்திரன்" என்ருன் யக்ஷன், "நீ என்னை தேவர்கள் குழாத்தில் பார்த்ததுண்டா?" என வினவ இல்லையென்று கூறினுன். "தேவர்களிடை பார்க்காத என்னை, தேவர்களுக்கு மேலான என்னை, யார் என்று கேட்க நீ யார்?" என்று சொல்லி வாய் புதைக்கச் செய்தார்.

பிரமன் யக்ஷனை யார் என்று கேட்க யக்ஷன் இவரைத் திருப்பிக்கேட்க பிரம்மா, "நான் படைப்பின் கடவுள்!" என்ருர். "உன் படைப்பில் நான் ஒருவனு? என்னை நீ படைத்தது உண்டா?" என்று யக்ஷன் வினவ, பிரமனும் இல்லை யென்று பதிலளித்தார். "உன் படைப்பில் அடங்காத, மேம்பட்ட என்னை யார் என்று கேட்க நீ தகுதியற்றவன்" என்று சொல்லி வாயடக்கினர்.

பார்த்தார் வாஸவன்! தானும், முன்போல் சும்மாயிருந்தால் சிறுமைபட வேண்டியதுதான் என்று தானும் பிரம்மனைப்போல் யக்ஷனை வினவினர். யக்ஷனும் திரும்பவும் அதேக் கேள்வியைப் போட, விஷ்ணு, "நான் காத்தல் கடவுள். சகல ஜீவன்களுக்கும் ஆதரவளிப்பவன்" என்ருர். "நீர் காத்தற் கடவுள் என்கிறீரே. உன் தொழிலில் நான் தாகமென்று கேட்டு சிறிதளவு நீரா வந்து கொடுத்ததுண்டா? அம்மாதிரி கொடுத்ததாக நினைவிருக்கிறதா?" என்று வினவ மாலும் இல்லையென்று விடையளித்தார். உடனே, "எப்பொழுது, நான் உம் காத்தல் தொழிலுக்கும் மேம்பட்டவனே என்னை யார் என்றுகேட்க உனக்கு வாய் கிடையாது" என்று யக்ஷன் சொல்லி அடக்கினுர். தேவர்கள் யாவரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே அந்தர்த்யானமானுர்.

மறுக்கணம் சக்தி தேவி ஆகாசத்தில் காட்சி அளித்தாள். தேவர்கள் அதிவினயத்துடன் "யக்ஷன் யார்" என்று சக்தியை வினவின்ர். சக்தி சொல்லுவாள் "அவரை இன்னுமா அறிந்து கொள்ளவில்லை. அவர் தான் என் பதி, பரமேசன்" என்று கூற, "பரம சிவன் ரிஷபாரூடராய், பார்வதி சமேதராய்க் காட்சி கொடுத்தார். தேவர்கள் தங்கள் மதியீனத்திற்கு வருந்தி மன்னிப்புக் கோரினர். அன்று முதல் யார் பெரியவன் என்ற சச்சரவே எழவில்லை. அவர்கள் உள்ளத்திலும் "அவனன்றி அணுவும் அசையாது" என்று பசு மரத்தாணி போல் பதிந்தது. மமதையும் ஒழிந்தது.

தமிழ் நூல்கள்

அசலாம்பிகை	2 4
ஸ்வரத்னலாகெட்	0 12
ராஞகதி சாஸ்திரம்	0 8
லோகமான்ய திலகர்	0 8
ரிரஞ்சிதமாலா	0 -

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

சூதகம் நின்றிருந்தால்.

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொரு ஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ. 5/8. பத்து ஷிலிங். Dr S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம்

கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆருடம்3கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டு போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானல், அடியில்கண்ட நமக்குத தெரியப்படுத்தினல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி. S. I.